Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

கர்ப்பிணி தாய்மாருக்கும், சிறார்களுக்கும் ஏற்ற போஷாக்கு நிறைந்த சத்து மா
ஜீவாகாரம்

அண்ணா தொழிலகம்
இணுவில் (சி-1617) T.P.-2223565

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஐப்பசி 13 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றம்ழான் 04 (30.10.2003) வியாழக்கிழமை இதழ்:30


பொலிஸாரையும் மீறி உள்நுழையும் சிஹல உறுமய குண்டர்கள்.


பத்திரிகையாளர்கள் எச்சரிக்கப்படுகிறார்கள்.


கலைக்கூடல் பதாகைகளுக்கு தீ வைப்பு

# கொழும்பு சிங்கள - தமிழ் கலைக்கூடலில் சிஹல உறுமயவின் குண்டர்கள் தாக்குதல்!

## பத்திரிகையாளர் இருவர் உட்பட ஏழு பேர் காயம்

(கொழும்பு)

**கொழும்பு - புதிய நகரமண்டபத்தில் நேற்று ஆரம்பமான சிங்கள- தமிழ் கலைக்கூடல் நிகழ்வைக் குழப்ப - சிஹல உறுமய ஆர்ப்பாட்டக்காரர்கள் மேற்கொண்ட தாக்குதலில் - இரண்டு பத்திரிகையாளர்கள் உட்பட, ஏழு பேர் காயமடைந்தனர்.**

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

நீண்டகாலப் போரினால் தமிழ்-சிங்கள மக்களிடையே எழுந்துள்ள கடுமையான கசப்புணர்வை சீர்செய்யும் வகையில், சிங்கள - தமிழ் கலைஞர்கள் இணைந்து, 'கலைக் கூடல்' நிகழ்வொன்றை கொழும்பு புதிய நகர மண்டபத்தில் ஒழுங்கு செய்திருந்தனர்.

'நிரந்தர சமாதானம்' என்ற தலைப்பில் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த கலாசார விழா - நேற்றுக் காலை ஆரம்பமானது. இந்த நிகழ்வில் நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் சேர்ந்த மூவினக் கலைஞர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வின் - நேற்றைய முதல் அமர்வில் எழுத்தாளர் செ.யோகநாதன் ஆரம்ப உரையாற்றிக்கொண்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை பொலிஸாரால் கைதான கடற்புலி போராளி பிணையில் விடுதலை

பருத்தித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கடற்புலிப் போராளி ஒருவரை பிணையில் செல்ல பருத்தித்துறை நீதிமன்று நேற்று அனுமதியளித்தது.

கடந்த 18 ஆம் திகதியன்று கரவெட்டியில் உள்ள குறித்த போராளியின் குடும்பத்தினரின் வீட்டைச் சுற்றி வளைத்து, பொலிஸார் அவரை கைதுசெய்தனர்.

வல்லிபுரக் குறிச்சிப் பகுதியில் தனியார் ஒருவருக்குச் சொந்தமான டிராக்டர் ஒன்றினை கடத்த முற்பட்டதாக செய்யப்பட்ட முறைப்பாட்டை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுத் தலைவர் நேற்று நோர்வே பயணமானார்!

(கொழும்பு)

போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் ட்ரைகேவ் ரெலவ்சன், உயர்மட்ட சந்திப்பினை மேற்கொள்வதற்காக நேற்று நோர்வே பயணமானார்.

அண்மையில், விடுதலைப் புலிகளின் கப்பல் ஒன்று கண்காணிப்புக் குழுவின் தகவலை அடுத்து, கடற்பகுதியில் தப்பிச் சென்றதாகவும், இதற்கான முழுப்பொறுப்பும் கண்காணிப்புக் குழுத் தலைவரையே சாரும் எனவும், எனவே இவரை உடனடியாகத் தலைவர் பதவியில் இருந்து நீக்கவேண்டுமெனவும், ஜனாதிபதி சந்திரிகா நோர்வேப் பிரதமருக்கு கடிதம் ஒன்றினை அனுப்பியிருந்தார்.

இந்த விடயம் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கே கண்காணிப்புக் குழுத் தலைவர் நோர்வே சென்றுள்ளார். (01)

## திருமலை - முள்ளிப்பொத்தானையில் முஸ்லிம்கள் நேற்று மறியற்போராட்டம்!

(திருகோணமலை)

திருமலை - முள்ளிப்பொத்தானையிலுள்ள 96 ஆம் மைல் கல்லில் நேற்றுக் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 2.00 மணிவரை முஸ்லிம்கள் மறியல் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 1 மணியளவில் முள்ளிப்பொத்தானையிலுள்ள ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 முஸ்லிம்கள் இனந்தெரியாதோரால் வாள் வெட்டுக் இலக்கானதைக் கண்டித்தே இந்த மறியற்போராட்டம் இடம் பெற்றது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் இரவு முள்ளிப் பொத்தானை - பாசிமடுவில் உள்ள 4 ஆம் வாய்க்கால் வயல் பிரதேசத்தில் முஸ்லிம்களின் கடையில் இருந்தவர்களின் மீது இனந்தெரியாதோர் மேற்கொண்ட வாள்வெட்டில், அங்கிருந்த ஒரே குடும்பத்தைச்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்புத் துறைமுகத்தைப் பாதுகாப்பதற்கு அமெரிக்கா - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்து!

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்தை பாதுகாப்பது தொடர்பாக, இலங்கையும் அமெரிக்காவும் நேற்று உடன்படிக்கை ஒன்றைச் செய்துள்ளன. அமெரிக்காவை நோக்கிச் செல்லும் சரக்குக் கப்பல்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் நோக்கில், கொழும்புத் துறைமுகத்தை பாதுகாப்பதற்கான உதவிகளை வழங்குவது இந்த உடன்படிக்கையின் நோக்கமாகும்.

சீ.எஸ்.ஐ. திட்டத்தின் ஒரு அம்சமாக, கொழும்புத் துறைமுகத்தை தரம் உயர்த்துவதற்குத் தேவையான நிதி உதவிகளை, அமெரிக்க வர்த்தக அபிவிருத்தி நிறுவனம் வழங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த முன்முயற்சியை இலங்கையில் அமுல் செய்வதன் மூலம் அதனை உயிர்ப்புடன் கூடிய பிராந்திய வர்த்தக மையமாக மாற்ற முடியும் என அமெரிக்கத் தூதரகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கத் துறைமுகங்களில் பிரவேசிப்பதற்கு முன்னர், சிக்கலான கொள்கலன்களை இனங்காணுவதற்கும், அவற்றை சோதிப்பதற்கும் வழிவகைகளை மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் உட்பட, பல அம்சங்கள் இந்த முன்முயற்சியில் அடங்குகின்றன. இது வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டால் சி.எஸ்.ஐ திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்படுகின்ற தெற்காசியாவின் முதற் துறைமுகமாக கொழும்புத் துறைமுகம் அமையுமென, அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

## நியூசிலாந்து, அவுஸ்திரேலிய எம்.பிக்கள் இளம்பரிதி குழுவினருடன் நேற்று சந்திப்பு!

### குடாநாட்டு நிலைமை தொடர்பாக விளக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்).

நியூசிலாந்து, அவுஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுக் காலை யாழ்.மாவட்ட அரசியற்துறை தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது, விடுதலைப் புலிகள் தரப்பில் யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் கலைவிழி மற்றும் போராளி மணிவண்ணன் ஆகியோரும்,

அவுஸ்திரேலியாவின் இலங்கைக்கான தூதரகத்தைச் சேர்ந்த மூன்றாவது செயலாளர் விங்ரன் கௌவிஸ் மற்றும் நியூசிலாந்து வெளிவிவகார அமைச்சின் வெளியுறவு பாதுகாப்பு மற்றும் ஆயுதக் களைவுகளுக்கான பேச்சாளர் கெயின்ஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில், குடாநாட்டு

(10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 012360290 012360291
email . jaffna @ expoavi . com.
(சி -1620)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...

# இலங்கை அரசு
# வடக்கு கிழக்கு மாகாணம்
# வடக்கு கிழக்கு துரித மீளமைப்புத் திட்டம்
# கடன் இல. 2880 - சி.இ. (CE)
# தேசிய போட்டிக் கூறுவிலை கோரல்
# நிர்மாண வேலைகள்

# மீள் கேள்வி அறிவித்தல் ஐ.எவ்.பி. (I.F.B)

ஐ.எவ்.பி.இல. கிளி./நீராப்/01

திகதி:30.10.2003

01. வடக்கு கிழக்கு துரித மீளமைப்புத் திட்டத்தின் ஆகு செலவு சார்பாக சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழே உள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களில் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் ஒரு பகுதியை பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இலங்கை உட்பட சகல நிதியிடும் நாடுகளைச் சேர்ந்த தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து பின்வரும் வரையறுக்கப்பட்ட வழிகாட்டலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன. ஐ.பி.ஆர்.டி. (I.B.R.D) கடன்வசதி, ஐ.டி.ஏ. (I.D.A) நம்பிக்கையின் கீழான வசதி.

02 அரசாங்க அதிபர், கிளிநொச்சி, இலங்கை அவர்களால் மூடியகேள்விகள் தகுதியான ஒப்பந்தகாரர்களிடமிருந்து பின்வரும் கட்டடத்தொகுதிகள் நிர்மாணிப்பதற்கு கோரப்படுகின்றன.

03. கீழே குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை காசாகவோ அல்லது கிளிநொச்சியில் மாற்றத்தக்கதான, அரசாங்க அதிபர், கிளிநொச்சி என்ற பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ (DRAFT) சமர்ப்பிப்பதன் பேரில் பிரதம எந்திரி, மாகாணக்கட்டடங்கள் திணைக்களம், கிளிநொச்சி அவர்களிடமிருந்து 01.12.2003 ஆம் திகதி பிற்பகல் 03. மணிக்கு கேள்விப்பொதிக்கான கேள்வி ஆவணங்களின இரு பிரதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

04. ஆர்வமுள்ள தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை பிரதம எந்திரி மாகாணக்கட்டடங்கள் திணைக்களம், கிளிநொச்சியில் இலவசமாகப் பார்வையிடுவதோடு, மேலதிக விபரங்களையும் பின்வரும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதம எந்திரி,
மாகாண கட்டடங்கள் திணைக்களம்,
பழைய கமம், முரசுமோட்டை,
பரந்தன், கிளிநொச்சி.

05. சமர்ப்பிக்கப்படும் கேள்விகள், கேள்வி திறக்கப்படும் தினத்திலிருந்து 90 நாட்கள் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன், அரசாங்க அதிபர், கிளிநொச்சி என்ற பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப்பிணையும், கேள்விகளுடன் இணைக்கப்பட்டு பின்வரும் முகவரிக்கு 02.12.2003 ஆம் திகதி பிற்பகல் மூன்று மணிக்கு முன் ஒப்படைக்கப்படவேண்டும்.

தலைவர்,
கேள்விச்சபை,
மாவட்டச் செயலகம்,
கிளிநொச்சி,
இலங்கை.

அதேதினம் பிற்பகல் 3 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம் மேற்குறிப்பிட்ட திகதியில் காரியாலயம் மூடப்படவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலை நாளன்று அதே இடத்தில், அதே நேரத்தில் கோரல்கள் பெறப்பட்டு திறக்கப்படும்.

06. வேறு விபரங்களை கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

| கேள்விக் குறியீட்டு இல. | வேலை விபரம் | கேள்விப்பிணை | கேள்வி ஆவணங்களின் பெறுமதி | வேலை நிறைவேற்ற வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| கிளி/நீர்ப்/சுவே/1 | சுகாதார வைத்தியஅதிகாரி விடுதி மீள் நிர்மாணம் சுற்றியற்கூறு, பளை. | 53,300/= | 750/= | 04 மாதங்கள் |
| கிளி/நீர்ப்/சுவே/2 | வெளிநோயாளர் பிரிவு மீள் நிர்மாணம் சுற்றியற்கூறு, பளை. | 93,000/= | 750/= | 05 மாதங்கள் |
| கிளி/நீர்ப்/சுவே/3 | வெளிநோயாளர் பிரிவு மீள் நிர்மாணம் சுற்றியற்கூறு, பூநகரி | 93,000/= | 750/= | 05 மாதங்கள் |
| கிளி/நீர்ப்/சுவே/4 | வைத்திய அதிகாரி விடுதி மீள் நிர்மாணம் கரைச்சி. | 55,000/= | 750/= | 04 மாதங்கள் |
| கிளி/நீர்ப்/சுவே/5 | உதவி வைத்திய அதிகாரி விடுதி மீள் நிர்மாணம், சுற்றியற்கூறு, பூநகரி. | 41,200/= | 750/= | 04 மாதங்கள் |
| கிளி/நீர்ப்/சுவே/6 | உதவி வைத்திய அதிகாரி விடுதி மீள் நிர்மாணம், மத்திய மருந்தகம், வேரவில். | 41,200/= | 750/= | 05 மாதங்கள் |
| கிளி/நீர்ப்/பிசே/1 | பிரதேச செயலகமும், பிரதேச செயலாளருக்குரிய விடுதியும், மீள் நிர்மாணம், கரைச்சி, கிளிநொச்சி. | 302,800/= | 1000/= | 15 மாதங்கள் |
| கிளி/நீர்ப்/பிசே/2 | உத்தியோகத்தர்களுக்கான விடுதி மீள் நிர்மாணம் மாவட்ட செயலகம், கிளி. | 132,200/= | 1000/= | 08 மாதங்கள் |

07 கேள்விதாரர்கள், கேள்விதாரர்களுக்கான செயற்பிரமாணக் குறிப்புகள் 04 பந்தியில் சொல்லப்பட்ட நடைமுறைகளை ஆகக்குறைந்த தகைமைகளாகக் கொண்டிருத்தல் வேண்டுமென இத்தால் ஆலோசனை வழங்கப்படுகின்றது. இந்தக் கேள்வி விபரத்தில் உள்ள ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களை வழங்கும் போது கேள்விதாரர் இவ்வேலைகளை நிறைவேற்றுவதற்குரிய வளமும், ஆளணியும், அனுபவமும், இருப்பது ஒரு தனி ஒப்பந்தத்துக்கு தேவைப்படும் தகைமையை திருத்திப்படுத்துவதாய் இருத்தல்வேண்டும்.

**தி. இராசநாயகம்,**
**அரசாங்க அதிபர்,**
**மாவட்டச் செயலகம்,**
**கிளிநொச்சி.**

(சி.1745)

அம்பாறை வட்டமடுவில்

# முஸ்லிம்கள் நெற்செய்கைக்கு விடுதலைப் புலிகள் அனுமதி!

அம்பாறை - வட்டமடுவிலுள்ள முஸ்லிம்களின் வயற்காணிகளில் உரிய ஆவணங்களை வைத்திருக்கும் முஸ்லிம்கள் - நேற்று முதல் நெற்செய்கையினை மேற்கொள்ளலாம் என மட்டக்களப்பு -அம்பாறை மாவட்ட அரசியற்துறைப்பொறுப்பாளர் கௌசல்யன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் வட்டமடுவிலுள்ள வயற் காணிகளைப் பார்வையிடச் சென்ற வேளையிலேயே, இவ்வாறு அவர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகள் தரப்பில் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் பாவா ஆகியோரும், முஸ்லிம்கள் தரப்பில் ஐ.எம்.இப்ராஹிம், அக்கரைப்பற்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அமைப்பாளர் யு.எஸ்.உவைஸ் ஆகியோரும், விசேட அதிரடிப்படை அதிகாரி உபுல் செனவிரட்ண, அம்பாறை மாவட்டக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் தலைமையில் நேற்று வட்டமடுவிலுள்ள முஸ்லிம்களின் வயற்காணிகளைச் சென்று பார்வையிட்டனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தப்பகுதிக்கு நெற்செய்கையினை மேற்கொள்ளச் சென்ற முஸ்லிம்கள்- இனந்தெரியாத சிலரால் தாக்கப்பட்டதும், அதன் பின்னர் கடந்ததிங்கள் புலிகளுடன் முஸ்லிம் பிரதிநிதிகள் சந்தித்துப் பேச்சு நடாத்தி, நேற்றைய தினம் வட்டமடுப் பகுதிக்குச் சென்று இவர்கள் பார்வையிட்டதும் குறிப்பிடத்தக்கது. (07)

வவுனியாப் பகுதியில்

# கோஷ்டி மோதல்; ஏழு பேர் படுகாயம்!

வவுனியாவில் இரண்டு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில், ஏழுபேர் காயமடைந்தனர்.

வவுனியாவில் - கிடாச்சூரி, மறவன்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த இளைஞர் குழுக்களே மோதலில் ஈடுபட்டன.

இச்சம்பவம் குறித்து விசாரணையில் ஈடுபட்ட பொலிஸாரும், இக் குழுவினரின் தாக்குதலுக்கு உள்ளாகினர்.

பின் அவ்விடத்துக்குச் சென்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் - இரு தரப்பினருடனும் பேச்சு நடத்தி, பிரச்சினையைச் சுமுகநிலைக்குக் கொண்டுவந்தனர்.

இந்தக் குழுக்களின் தாக்குதலில் விற்பனை நிலையங்கள், வியாபாரம் என்பனவும் பாதிப்படைந்தன.

நேற்றுமுன்தினம் ஆரம்பமான மோதல் - நேற்று 10 மணிவரை நீடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# 614 நிர்வாகசேவை வெற்றிடங்களை நிரப்புவதற்கு இவ்வாண்டு நடவடிக்கை!

(கொழும்பு)

இலங்கை நிர்வாக சேவையிலுள்ள 614 வெற்றிடங்களை, இவ்வாண்டு இறுதிக்குள் நிரப்புவதற்கான நடவடிக்கைகளைப் பொதுநிர்வாக மாகாண சபை அமைச்சு மேற்கொண்டு வருகிறது.

நீண்டகாலமாக இலங்கை நிர்வாக சேவையிலுள்ள பதவி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்காததால், அரசு செயலகங்களில் பணிகள் தாமதமடைவதாகவும், இதனால் உடனடியாக பதவிவெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்குமாறும் கோரி, இலங்கை நிர்வாகசேவை சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் மற்றும் அமைச்சர்களுக்கும் இந்தக் கோரிக்கை மகஜர்கள் அனுப்பிவைக்கப்பட்டிருந்தன. இதையடுத்து இந்தப் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு பொது நிர்வாக அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதேவேளை, வெற்றிடமாகவுள்ள 614 இடங்களில், ஆட்களை நியமனம் செய்வதற்கான அனுமதியை 2001 ஆம் ஆண்டு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தும் இந்த நியமனங்கள் வழங்கப்படாமல் இருப்பது குறித்தும், மேற்படி சங்கத்தின் மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# எதிர்க்கட்சி பின்வரிசை ஆசனத்தில் அமர புத்திரசிகாமணி அனுமதி கோருகின்றார்

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் எதிர்கட்சி கடைசிவரிசை ஆசனத்தில் அமர்வதற்கு, நாடாளுமன்றச் செயலாளரிடம் அனுமதி கோரியிருப்பதாக, பொதுஜன ஐக்கிய முன்னணியிலிருந்து வெளியேறிய நாடாளுமன்ற உறுப்பினர் இரா.புத்திரசிகாமணி தெரிவித்தார்.

தீபாவளித் தினத்தன்று கொழும்பு நகரில் ஆர்ப்பாட்டப் பேரணி நடாத்தியமை, தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கை என்பதை பொதுஜன ஐக்கிய முன்னணி ஏற்றுக்கொள்ளும்வரை, இந்த எதிர்ப்பைக் காட்டப் போவதாக தெரிவித்த புத்திரசிகாமணி - தனது எதிர்ப்பு நடவடிக்கை குறித்து, கட்சித் தலைவர்களிடமிருந்து எந்த அறிவித்தலும் தனக்குக் கிடைக்கவில்லை எனக் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்குப் பின்னால் உள்ள ஆசனத்தில் அமர்வதற்காக அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக, நாடாளுமன்ற செயலாளர் நாயகம் சிறியாணி விஜியசேகராவுடன் பேச்சு நடத்தியதாகவும், இதற்கான அனுமதி கிடைக்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

# நஷ்டஈடு கோரி துறைமுக ஊழியர்கள் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்

துறைமுக அதிகாரசபையின் 15 ஊழியர்கள் - 150 இலட்சம் ரூபா நட்டஈட்டைக்கோரி - அடிப்படை உரிமை மீறல் வழக்கு ஒன்றினை, உயர் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளனர்.


கடந்த மே மாதம் 7 ஆம் திகதி வாழ்க்கைச் செலவு உயர்வு மற்றும் தொழிற்சங்க உரிமைகளை வலியுறுத்தி, அதிகார சபையின் ஊழியர் போராட்டம் ஒன்று நடாத்தப்பட்டது.

இந்தச் செயற்திட்டம் சட்ட விரோதமானது எனக்கூறி, 15 பேரும் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

இடைநிறுத்தப்பட்ட ஊழியர்கள் தமது வேலை நீக்கத்தை ஆட்சேபித்து, அடிப்படை உரிமை மீறல் மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர்.

# சிங்கள - தமிழ் கலைக்கூடலில், சிஹல உறுமயவின் தாக்குதல் காட்சிகள்





சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலையில் அண்மையில் நடைபெற்ற பரிசளிப்பு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட உடுவில் கல்விக்கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் குபேரனாதனுக்கு மலர் மாலை அணிவித்து வரவேற்பதை படத்தில் காணலாம் (44)

# தற்போதைய சமாதான முயற்சிகள் தடைகளைத் தாண்டி வெற்றி பெறும்

## அவுஸ்திரேலியா பாராளுமன்ற உறுப்பினர் நம்பிக்கை தெரிவிப்பு

இலங்கையில் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகள் - தடைகளையும் தாண்டி வெற்றி பெறும் எனும் நம்பிக்கை, எம்மிடம் அதிகமாகவே உள்ளது. எனத் தெரிவித்தார் - அவுஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினரும், நிழல் அமைச்சருமான, அலன் கிறிஸ்பின்.

ஒருநாள் விஜயத்தை மேற்கொண்டு, நேற்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த இவர் - கொக்குவிலில் உள்ள விடுதலைப்புலிகளின் அரசியற்துறை அலுவலகத்தில், விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடினார். அதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுவரும், சமாதான முயற்சிகள் தடையின்றி முன்னேறவேண்டும் எனப் பூரணமாக விரும்புகிறோம். ஆனாலும், ஒரு சில தீயசக்திகள் சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போட்டு வருவதையும், நாங்கள் நன்றாகவே அறிவோம். அந்தத் தடைகளையும் மீறி சமாதான நகர்வுகள் முன்னெடுக்கப்படல் வேண்டும். இதற்கு அனைத்துத் தரப்பினரும் தமது முழு மையான பங்களிப்பையும் செலுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இவருடன் நியூஸிலாந்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் - வில் நன்கவிஸ், அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் அதிகாரிகள் ஆகியோரும் வருகை தந்திருந்தனர்.

இந்தக் கலந்துரையாடலில், விடுதலைப்புலிகளின் சார்பாக யாழ்- மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி , யாழ்-மாவட்டப் மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவிழி, அரசியற்துறையைச் சேர்ந்த மணிவண்ணன், சுதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

குடாநாட்டின் தற்போதைய நிலவரங்கள் தொடர்பாக, இளம்பரிதி எடுத்துக் கூறினார். பருத்தித்துறைப் பகுதியில் மீனவர்கள் மீதுநடத்தப்பட்ட தாக்குதல், அரியாலை - மதவடிப் பகுதியில் மக்கள் மீதும், பத்திரிகையாளர்கள் மீதும் நடாத்தப்பட்ட தாக்குதல் சம்பவங்கள் பற்றியும், இளம்பரிதி விரிவாக எடுத்துக் கூறினார்.

பத்திரிகையாளர்கள் மோசமாகத் தாக்கப்பட்ட செய்தியைக் கேட்டு, அலன் கிறிஸ்பின் ஆச்சரியம் அடைந்தார்.

புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிட்ட விடயங்களில் சொற்ப அளவான விடயங்களே நிறை வேற்றப் பட்டுள்ளன. புனர்வாழ்வு, புனரமைப்பு பணிகளுக்கு மதிப்பீடு செய்யப்பட்ட தொகை அதிகமாக உள்ளது. ஆனால், மிகக் குறைந்தளவு நிதியே அரசால் வழங்கப்பட்டுள்ளது.



புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் 160 நாட்களுக்குள் பொது இடங்களிலிருந்து படையினர் வெளியேற வேண்டும். ஆனால், இன்னும் பொது இடங்களில் இராணுவத்தினர் தங்கியுள்ளனர். இது தொடர்பாக பல கருத்துக்கள் பேச்சுவார்த்தைகளின் போதும் ஆராயப்பட்டுள்ளது.

தமிழ் மக்களது உரிமைகளுக்கு மதிப்பளித்து, அவர்கள் தமது வாழ்விடங்களிலே வாழ அனுமதிக்கப்பட வேண்டும். இதற்காகவே தமிழ் மக்களும் விடுதலைப்புலிகளும் ஒரே அணியில் நின்று சமாதானத்திற்காக குரல் கொடுக்கிறார்கள் எனவும் இளம்பரிதி எடுத்துக் கூறினார்.

இடைக்கால நிர்வாகம் விடுதலைப்புலிகளிடம் வழங்கப்படவேண்டும் எனக்கோரி, பல்வேறு பொது அமைப்புக்களினாலும் தேசியத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதங்களின் பிரதிகளையும், இளம்பரிதி அலன் கிறிஸ்பின் இடம் கையளித்தார்.

இந்தச் சந்திப்பை நிறைவு செய்துகொண்டு, அரச அதிபர், அருட்திரு ஜெயக்குமார் அடிகள், சர்வதேச நிறுவனப் பிரதிநிதிகள், கடற்றொழிலாளர் சம்மேளனத்தினர், கண்ணிவெடி அகற்றும் பிரிவினர்களையும் இக்குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்புக்கள் தொடர்பாக செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட அலன் கிறிஸ்பின் - தமிழ் மக்களுடைய உண்மையான பிரச்சனைகளை நாம் புரிந்துகொள்ள ஆரம்பித்துள்ளோம். எனத் தெரிவித்தார்.

# மாவீரர்களின் பெற்றோர்களை பதிவுசெய்யக் கோரிக்கை!

இந்தவருடம் நடைபெறும் மாவீரர் தினத்திற்கு, யாழ்.மாவட்டத்திற்கு வெளியேயுள்ள, துயிலுமில்லங்களுக்குச் செல்லும் மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோருக்கு பிரயாண ஒழுங்குகள் செய்யப்படவுள்ளது.

இதன்படி முள்ளியவளை, வன்னிவிளாங்குளம், ஆலங்குளம், விசுவமடு, முழங்காவில், ஆட்காட்டிவெளி, வவுனியா, கிளிநொச்சி, அளம்பில் பண்டிவிரிச்சான் ஆகிய துயிலுமில்லங்களுக்குச் செல்லும் மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோர் தங்கள் கோட்ட, பிரதேச, மாவட்ட அரசியல்துறைச் செயலகங்களில் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் தங்களது பெயர்களைப் பதிவு செய்துகொள்ளுமாறு, யாழ்.மாவட்ட அரசியற்துறையினர் கேட்டுள்ளனர்.

# மகளிர் மேம்பாட்டு பயிற்சிப் பாசறை

கியூடெக் நிறுவனத்தின் பெண்கள் அமைப்பிற்கான பயிற்சிப் பாசறை, நாளை வெள்ளிக்கிழமை கியூடெக் நிறுவன மண்டபத்தில் இயக்குனர் சி.ஜி.ஜெயக்குமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

25 பெண்கள் அமைப்புக்கள் பங்குகொள்ளும் இந்தப் பயிற்சிப் பாசறையானது, மகளிர் மேம்பாடு எனும் கருப்பொருளில் இடம் பெறவுள்ளது. இந்த நிகழ்வில் மகளிர் குழு பிரதிநிதிகளும், அங்கத்தவர்களும் கியூடெக் இணைப்பாளர், ஊக்குவிப்பாளர்கள் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (91)

# கட்டாக்காலி மாடுகளால் நெற்செய்கை பாதிப்பு

மட்டுவில் பகுதியில் கட்டாக் காலிகளாகத்திரியும் மாடுகளால், கால போக நெற்செய்கை பெரிதும் பாதிக்கப்படுவதாக, அந்தப் பகுதி விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

2000 ஆம் ஆண்டு இடப்பெயர்வு காலத்தில் இப்பகுதி மக்களால் கைவிடப்பட்ட மாடுகள் எதுவித கட்டுப்பாடுகளுமில்லாமல், வளர்ந்துள்ளதால் அவற்றைப் பிடிப்பது சிரமமாக உள்ளதாகவும், இந்தப் பகுதியில் உள்ள காடுகளில் மறைந்து வாழும் மாடுகள் இராக்காலங்களில் கூட்டம் கூட்டமாக வந்து, பயிர்களை நாசம் செய்வதாகவும் அந்தப்பகுதி விவசாய சமமேளனத் தலைவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி சம்மேளனத்தினரால் பலத்த சிரமத்தின் மத்தியில் சுற்றிவளைத்துப் பிடிக்கப்படும் மாடுகள் ஏலத்தில் விற்கப்படுவது குறிப்பிடத்தக்கது. இதேவேளை தமது கால்நடைகளைக் கட்டிவளர்க்குமாறும், கட்டாக்காலிகளாகத்திரியும் மாடுகள் சம்மேளனத்தால் பிடிக்கப்படுமாயின் ஏலத்தில் விற்கப்படும் எனவும் சங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

## மாவீரர் துயிலும் இல்லம் சிரமதானம்

மாவீரர்தினத்தை முன்னிட்டு - கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில், பொதுமக்கள் போராளிகள் எனப் பலரும் சிரமதானப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். சுழற்சி முறையில் பொதுமக்கள், போராளிகள் என்போர் எழுச்சியுடன், உணர்வுபூர்வமாக இந்தச் சிரமதானப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர். (29)

# பஸ் பழுதடைந்ததால் போக்குவரத்து பாதிப்பு

நெடுந்தீவில் உள்ளூர்ப் போக்குவரத்து சேவையில் ஈடுபட்டுவந்த, வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேரூந்து, கடந்த 5 நாட்களாக பழுதடைந்ததன் காரணமாக சேவையில் ஈடுபடவில்லை.

இந்தப் பேரூந்து - நெடுந்தீவு மேற்கில் இருந்து துறைமுகம் நோக்கி வந்து கொண்டிருந்த வேளை, சீக்கிரியாம்பள்ளம் பகுதியில் பழுதடைந் தமையால், அந்தப் பகுதியிலேயே கடந்த 5 நாட்களாக தரித்து நிற்கிறது. நெடுந்தீவிற்கான பேரூந்து சேவையில் ஏதும் திருத்த வேலைகள் என்றால், விரைந்து செயற்படும் வகையில் இதுவரைக்கும் வட பிராந்திய போக்குவரத்துச்சபையினர் அக்கறை கொள்வதில்லை என, மக்கள் விசனப்படுகின்றனர்.

தற்போது சேவையில் ஈடுபடுத்தப்படும் பேரூந்தினை, புதிதாகக் கொண்டுவந்து கடற்படைதரையிறங்கு கலம் மூலம், தரையிறக்க மக்கள் பெரும் பிரயத்தனம் செய்ததன் மூலம், உள்ளூர்ப் போக்குவரத்தில் பேரூந்தின் அவசியம் எந்தளவுக்கு தேவை என்பது, உரியவர்களுக்குப் புரியவேண்டும் என பயணி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது பயணிகள் சேவையில் தனியார் ஒருவரின் வாகனமே ஈடுபட்டுவருவதுடன் வைத்திய சாலைக்கு வந்து செல்ல மக்கள் பெரும் கஷ்டமடைவதும் குறிப்பிடத்தக்கது. (113)

# பொதுமக்களின் வாகனத்தை மோதிய சிப்பாய்க்கு 2000 ரூபா குற்றப்பணம் செலுத்த நீதிமன்றம் உத்தரவு

வாகன சாரதி அனுமதிப் பத்திரமின்றி வாகனங்களைச் செலுத்தி, பொதுமக்களுக்கு சொந்தமான, வாகனங்கள் இரண்டை மோதியமை தொடர்பான குற்றச் சாட்டின் பேரில் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட சிப்பாயை, இரண்டாயிரம் ரூபா அபராதமாகச் செலுத்த நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

நேற்று யாழ்.நீதிமன்றில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, இந்தத் தீர்ப்பை நீதிவான் வழங்கினார். அத்துடன், நீதிமன்றில் இராணுவத் தலைமையால் சிப்பாய்க்கு வழங்கப்பட்டிருந்த வாகன அனுமதிப்பத்திரத்தை ஏற்று அங்கீகாரம் வழங்கியுள்ளார்.

இவ்வாண்டின் மார்ச் 19 ஆம் திகதி யாழ் - கண்டி வீதியில் இராணுவ ட்ரக் வண்டி மோதியதில், பொது மக்களது வாகனங்கள் இரண்டு சேதமுற்றிருந்தன. இதனையடுத்து குறித்த வாகனத்தைச் செலுத்தி வந்த படைச்சிப்பாயான லியனகே சோமவன்சவுக்கு எதிராக பொலிஸாரால் யாழ்.நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குறித்த சிப்பாய் பல தடவைகள் நீதிமன்றில் ஆஜராகாத நிலையில், அவருக்கு எதிராக சாவகச்சேரி பொலிஸாரால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், நேற்று நீதிமன்றில் குறித்த சிப்பாய் ஆஜரானதையடுத்து மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்

பெயர் : தி.திவ்யன்
முகவரி : மீசாலை வடக்கு, கொடிகாமம்



முதலாவது அகவையில்



பெயர் : கு.கார்த்தீபன்
முகவரி : வேலணை மேற்கு, வேலணை.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------
முகவரி :------------------------
பிறந்த ஆண்டு:------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

--------------------
பெற்றார் ஒப்பம்




# யாழ்: குடாநாட்டில் இஞ்சி, மஞ்சள் உற்பத்தி

யாழ்.மண்ணிற்கு ஓர் மகிமை உண்டு. அதாவது தன்னை நேசித்த எத்தனையோ மாவீரரது குருதியிலே நனைந்திருக்கிறது. இத்தகைய மண்ணிலே கத்தி இல்லாமல் இரத்தம் சிந்தாமல் செய்யும் சத்திரசிகிச்சையைப்போல எந்தவகையான செயற்கை வளமாக்கிகளையோ, கிருமி நாசினிகளையோ பயன்படுத்தாமல் ஒரு பயிர் விளைகிறது என்றால் ஆச்சரியாமாய் இல்லை? தொடர்ந்து படியுங்கள் புரியும்.

"உப்பில்லா உணவு பாழ்" என்பதுபோல தற்போது உப்பிற்கு ஈடிணையாக வாசனைத் திரவியங்கள் இவ்விடத்தில் சமபங்கை வகிக்கின்றன. அந்தவகையில் இஞ்சியும், மஞ்சளும் எமக்குக் கிடைக்கும் உணவை அறுசுவைப்படுத்தவும், இலகுவில் ஜீரணிக்கவும் செய்கின்றன. இவற்றைவிட எண்ணற்ற மருத்துவ உதவிகளையும் இவை செய்கின்றன.

யாழ்.குடாநாடானது - இஞ்சி, மஞ்சள் செய்கைக்கு எவ்வளவுதூரம் சாத்தியமானது என்பதைப் பார்ப்போம். எமது மழைவீழ்ச்சி, வெப்பநிலை, மண் இஞ்சி உற்பத்திக்கு நனி



சிறந்தாகும். ஓரளவு இளஞ்சூடான வெப்பநிலை விளைச்சலை ஓரளவு பெருக்க வசதியாக இருக்கும். அத்துடன், 5-6 மாதத்திற்கு மாத்திரம் ஈரமான காலநிலை இருந்தால் நன்றாக இருக்கும். இவ்வகையில் சித்திரை மாதம் இதற்கு பொருத்தமாக அமையும். ஓரளவு களித்தன்மையுடன் கூடிய மணல்மண் - கிழங்குகள் இலகுவில் வளரவும், பருமனில் பெருக்கவும், அறுவடை செய்யவும் சாதகமாக அமையும். இந்த வகையில், வலிகாமம் கிழக்கின் மத்திய பகுதிகளாகிய உரும்பிராய், ஏழாலை, இருபாலை மற்றும் இணுவில், அளவெட்டி பகுதிகள் இதற்கு பொருத்தமான இடமாக உள்ளது.

அடுத்ததாக - விதைஇஞ்சிக் கிழங்குகளை எவ்வாறு தெரிவு செய்வது? விதைஇஞ்சிக் கிழக்குகளைத் தென்பகுதியிலிருந்து பெற்றுக்கொள்வதுதான் சாலச்சிறந்தது. கூரிய தொற்று நீக்கப்பட்ட கத்தியை பாவித்து, கிழங்கை சிறிய துண்டங்களாக உடைத்தல் வேண்டும். ஒவ்வொரு துண்டத்திலும், குறைந்தது 1-3 முளைகளாவது இருத்தல் அவசியம். இவ்வாறு உடைக்கப்பட்ட துண்டங்களை நேரடியாக நடாமல், முதலில் நாற்றுமேடை ஒன்றை தயார்ப்படுத்தல் வேண்டும். சாதாரணமாக வெங்காயம், புகையிலைக்கு அமைக்கும் நாற்றுமேடைபோல் அமைத்தால் நன்று.

அடுத்ததாக மண்ணை எவ்வாறு பண்படுத்துவது? 3-4 முறை டிஸ்க் (Disc) பாவித்து நிலத்தை பண்படுத்தல்வேண்டும். ஆழமாக உழத்தேவையில்லை. நிலத்திற்கு எந்தவித செயற்கை வளமாக்கிகளையும் பயன்படுத்தத் தேவையில்லை. சாதாரண புளியஞ்சருகும், மாட்டெருவும் சொன்னதுகேட்கும். குறைந்தது 10 லோட் (Load) புளியஞ்சருகும், மாட்டெருவும் ஒரு ஏக்கரிற்குபோதுமானதாக இருக்கும். நாற்றுமேடையிலிருந்து, தெரிவு செய்யப்பட்ட இஞ்சி நாற்றுக்களை "11/2 x 21/4" என்ற பரி மாணத்தில் நடல் வேண்டும். இவ்வாறு பார்க்கையில், ஒரு ஏக்கர் நிலத்திற்கு 80 kg இஞ்சி போதுமானதாக இருக்கும்.

நாற்றுமேடையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட வீரியமான இஞ்சி, மஞ்சள் நாற்றுக்களை மேற்கூறப்பட்ட மண்ணில் நடல் வேண்டும். இவ்வாறு நடுகையில், எல்லைப் பயிராக மஞ்சளை நட்டு, அதற்குள் இஞ்சியை நடலாம். பல ஆராய்ச்சியாளர்களின் முடிவுகள் தனியாக இஞ்சி, மஞ்சள் பயிரிடாமல் (ஊடுபயிராக) நிழலுள்ள இடத்தில் அதாவது, வாழைகளின் கீழ் நடுகை செய்வதில் கூடியளவு பலனைப் பெறலாம் என நிரூபித்துள்ளது. எனவே, வாழை நன்கு வளரும் பகுதிகளும் இந்த செய்கைக்கு பொருத்தமானதாக அமையும். ஆரம்பத்தில் 4 நாட்களுக்கு ஒருமுறை நீர் இறைத்தாலும், பின்னர் 7-8 நாட்களிற்கு ஒருமுறை நீர் இறைக்கலாம்.

இன்று எமது விவசாயிகளிடமிருக்கும் பெரும் பிரச்சினை என்னவென்றால் - எதற்கெடுத்தாலும் அவசரப்பட்டு தேவைக்கதிகமாக வளமாக்கிகளையோ அல்லது கிருமிநாசினிகளையோ விசிறுவதுதான். இஞ்சியில் இயற்கையாகவே இருக்கும் காரத்தன்மையால் - புழு, பூச்சிகள் இலகுவில் அண்டாது. எனினும், பனிப்பூச்சிகளின் தாக்கம் சிறிது இருக்கத்தான் செய்யும். இதைச் சாதாரணமான மரபு முறைகளைப் பயன்படுத்திக் கட்டுப்படுத்தமுடியும். களைகளால் பெரியளவில் பாதிப்பு இல்லாவிடினும், மாதம் ஒருமுறை கைகளாலேயே களை எடுக்கலாம்.

இஞ்சியானது 8-12 மாதகாலப்பயிராகும். எனினும், ஆராய்ச்சிகளின் பிரகாரம் 8 மாதத்திற்கான உற்பத்திச் செலவானது, 12 மாதத்திற்கான உற்பத்திச் செலவிலும் குறைவாக இருக்கும். எனவே, 8 மாதத்தில் இதனை அறுவடை செய்வதுதான் சிறந்தது. மேலும் தைப்பொங்கலை அண்டிய காலங்களில் இஞ்சி, மஞ்சள், இலைகளிற்கான மவுசும் அதிகமாக இருக்கும். ஆகையால், சித்திரையில் போட்டபயிரை தையில் அறுவடை செய்வது சாலச்சிறந்தது.

இவற்றின் அறுவடையை பற்றி பெரிதாக எதுவும் யோசிக்கத் தேவையில்லை. சாதாரணமாக மரவள்ளிக் கிழங்கு கிளறுவது போலதான் இதுவும். சாதாரணமாக ஒரு ஏக்கரிலிருந்து 1600 kg - 1800 kg வரையான இஞ்சியும் 3800 kg - 4000 kg வரையான மஞ்சளையும் அறுவடை செய்யலாம் என்ன மலைப்பாக இருக்கிறதா?

இவ்வாறான உற்பத்திச் செலவு குறைந்த பயிரைச் செய்வதில் ஏன் குடாநாட்டு விவசாயிகள் பாரமுகமாக இருக்கிறார்கள், இங்குள்ள விவசாயிகளில் பெரும்பாலானோர் வறியவர்கள். இஞ்சி செய்கைக்கு நாற்று நடுதலிலிருந்து, அறுவடை வரை ஏறத்தாழ ஒருவருடம் தேவை. அவ்வளவு காலத்திற்கும் சாதாரண ஒரு விவசாயி பொறுமையாக இருக்கமுடியுமா? இத்தகைய ஒருவருடகாலத்தில், சாதாரண மரககறியை பயிரிட்டாலும் 3-4 தடவைகள் சந்தைப்படுத்தமுடியுமா என யோசிப்பார்கள்.

அதுமட்டுமா? விவசாயி இப்பயிரைச் செய்தாலும், எல்லாம் கனிந்துவரும் தருணத்தில் "தெய்வம் வழிவிட்டாலும் பூசாரி வழிவிடான்" என்பதுபோல மதில்மேல் பூனைகளாக காத்திருக்கும் வியாபாரிகளோ லபக்கென எவ்விதக் கட்டுப்பாடுகளுமின்றி, பெருந்தொகையாக தென்பகுதியிலிருந்து இவற்றைப் பெற்று உள்ளூர் சந்தைகளில் உலாவவிடுவார்கள். எவ்வாறு சாதாரண ஓர் விவசாயியால் இப்போட்டியைச் சமாளிக்க முடியும்?

பெருந்தொகையாக இவற்றை ஒரேகாலத்தில் அறுவடை செய்யும்போது, சந்தையில் அதற்கான கிராக்கியானது தளம்பப்பார்க்கும். இவற்றை நீண்டகாலமாக எவ்வாறு கெடாமல் வைப்பது என்பதுபற்றி இன்றுவரை பலரிற்குத் தெரியாது. மஞ்சளை எடுத்துக்கொண்டால் - இதைப் பதப்படுத்தி பாதுகாப்பது என்பது நேரம் விரையமானவேலை. ஏனெனில், நீண்ட நேரம் எடுப்படுதுமட்டுமன்றி 1 kg ஐ பதப்படுத்துகையில், ஏறத்தாழ 100-150 kg மட்டுமே எஞ்சும். அத்துடன், சந்தையில் இதன் விலையோ மிகவும் குறைவு. எனவேதான் மஞ்சளின் இத்தகைய மகிமையை அறிந்து பெரும்பாலும் காவற்தெய்வங்களாக அதாவது, எல்லைப் பயிராக வளர்கிறார்கள்.

இஞ்சி, மஞ்சளை எவ்வாறு பதப்படுத்துவது என்பதை அறிய வாசகர்கள் ஆர்வமாக இருப்பீர்கள் என நினைக்கிறேன். முதலில் மஞ்சளை எவ்வாறு பதப்படுத்துவது என்று பார்ப்போம். அறுவடை செய்த மஞ்சளை துப்புரவு செய்து, நீரால் கழுவவேண்டும் மஞ்சள் கிழங்குகளின் தொடுகை மேற்பரப்பை அதிகரிப்பதற்காக, சிறியதுண்டுகளாக உடைத்தல் வேண்டும். பின்பு உடைக்கப்பட்ட இந்தக் கிழங்குகளைப் பெரிய பானைக்குள் இட்டு மஞ்சள் இலை, உரப்பை, களிமண் என்பவற்றைப் பாவித்து பானைவாயை காற்றுப்புகாமல் இறுக்கமாக மூடல் வேண்டும். பின் அடுப்பில் 3 மணித்தியாலங்களுக்கு வைத்திருந்த பின்னர், குளிர விடல் வேண்டும். இவ்வாறு குளிரவிடப்பட்ட மஞ்சளை 5-7 நாட்களிற்கு சூரிய ஒளியில் வைத்து உலர்ததிய பின். பைக்கற்றுகளில் அடைககலாம். இதன்போது 5 kg உடன் மஞ்சளில் இருந்து 1 kg பதப் படுத்திய மஞ்சளைப் பெறலாம்.

இஞ்சியின் பதப்படுத்துகை முறையானது, மஞ்சளின் பதப்படுத்துகை முறையிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. அறுவடை செய்த இஞ்சிக் கிழங்குகளிலருநது, சிறிய வேர்களும், மண்ணும அகற்றப்பட்ட பின்னர் நீரால் முறறு முழுதாகக் கழுவுதல் வேண்டும். வெளித்தோலை இலகுவாகவும், வினைத்திறனாகவும் அகற்றுவதற்காக தண்ணீரில் ஒரு நாள்வரை ஊறவைக்க வேண்டும். கிழங்கிற்கு ஊறு விளைவிக்காமல், வெளித்தோலை மிகவும் கவனமாக அகற்றல் வேண்டும். பின்னர் தூயதண்ணீரால் நன்கு கழுவிய பின்னர் சாக்கின்மேல் இஞ்சியைப் பரவி சூரியஒளியில் காயவைத்தல் வேண்டும். சீரான உலர்தலை உறுதிப்படுத்துவதற்காக, இடைக்கிடை கிழங்குகளை திருப்பிவிடல் வேண்டும் இவ்வாறு 6 நாட்களுக்கு முற்றுமுழுதாக உலர்திய பின்னர் கிழங்குகளை பைகளில்போட்டு பாதுகாக்கலாம். இவ்வாறு 6 kg இஞ்சியிலிருந்து 1 kg பதப்படுத்திய இஞ்சியைப் பெறலாம்.

இறுதியாக சிறந்த இஞ்சி சந்தைப்படுத்தலுக்கு-

- ♣ உயர் விளைச்சலைத் தரும் இனங்களைப் பயிரிடுதல்.
- ♣ அறுவடைக்கால இறக்குமதியை கட்டுப்படுத்தல் (தென்பகுதியிலிருந்து)
- ♣ இஞ்சிக் செய்கையின் சாத்தியத்தன்மை பற்றி விவசாயிகளுக்கு விளக்கமளித்தல் வேண்டும்.

| | |
|---|---|
| ஒரு வருடகாலத்திற்கான மொத்தச் செலவு | 119,000.00 |
| மொத்த வருமானம் (இலை + கிழங்கு) | 641,500.00 |
| மொத்த இலாபம் | 522,500.00 |

எனவே சிறந்த இலாபத்தைப் பெற உடனடியாக இஞ்சிச் செய்கையில் ஈடுபடலாமே!

இ.சற்குணன்
தகவல் தொடர்பு மையம்
(மாணவர் பகுதி)
விவசாய பீடம்

## தொழில் வங்கி



| | |
|---|---|
| நிறுவனம் | கோடேய் (Cordaid) சமாதான திட்ட முன்னெடுப்பு மன்னார் மாவட்டம். |
| வெற்றிடமாக உள்ள பதவிகள் | திட்ட இணைப்பாளர் |
| அடிப்படைத் தகுதி | பட்டதாரி<br>ஆங்கில புலமை<br>கணினி அறிமுகம்<br>மனிதநேய தலைமைத்துவ பயிற்சி |
| விண்ணப்ப முடிவு திகதி | 07.11.2003 |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப்பெற விரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

# வீட்டுத்தோட்டத்தில் புடோல் செய்கை

ஒவ்வொரு பயிர்களும் தனித்தனியான சிறப்பியல்புகளையும், சிறப்புத்தன்மைகளையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. எம்முடைய நாளாந்த உணவில், தினமும் ஒவ்வொரு மரக்கறியைச் சேர்ப்பது அவசியம். வீணே கிடக்கும் நிலங்களிலும், வீட்டுத்தோட்டங்களிலும் மரக்கறிப்பயிர்களை நடுகை செய்வதன்மூலம், அன்றாட மரக்கறித் தேவை பூர்த்திசெய்யப்பட்டுவதுடன், சத்துமிக்க உடன மரக்கறிகளைப் பெற்றுக் கொள்ளவும் முடியும், அத்துடன், அன்றாட வருமானத்தைச் சேமித்துக் கொள்வதுடன், மேலதிக நேரங்களை பூரணமாகப் பயன்படுத்திய மனநிறைவும் கிடைக்கும். அந்தவகையில் புடோல் செய்கை பற்றிய விவசாய முறைகளை அறிந்து கொள்வோம். நன்கு கிளைவிட்ட ஆணி வேர்த் தொகுதியையும், படரும் தன்மையையும், முளைத்து 2-21/2 மாதங்களில் காய்கள் தரும் தன்மையும் கொண்ட, ஒரு மரக்கறிப் பயிர் புடோல் ஆகும். இது நட்டு 4 மாத முடிவிற்குள் கூடிய விளைச்சலைத் தரக்கூடியது. காய்கள் 30 செ.மீ - 150 செ.மீ வரை வளரும் தன்மை கொண்டது.

பின்வருவன புடோலின் சிறப்பான இனங்களாக் காணப்படுகின்றது.

### திருநெல்வேலி வெள்ளை

இது 4 மாத வயதுடையதும், காய்கள் வெண் சாம்பல் நிறமுடையதாகவும் காணப்படும். அவற்றில் வெண்நிறக் கோடுகள் நீள் பக்கமாகக் காணப்படும் இவ்வினத்தின் காய்கள் ஒரு மீற்றர் நீளம்வரை வளர்ச்சியடையும்.

### T. A - 2ს

இதுவும் 4 மாத வயதுடையது. காய்கள் வெண் சாம்பல் நிறமானவை. ஆனால், முதிர்ச்சியுறும்போது பச்சைநிறமான கோடுகள் நீள்பக்கமாகக் காணப்படும். இதன் காய்கள் ஒரு மீற்றருக்கு மேல் நீளமாக வளர்ச்சியடையும்.

### M.I (சிறியது)

இதுவும் மற்றைய இனங்களைப்போல் 4 மாத வயதுடையது. இதன் காய்கள் 1/2 மீற்றர் நீளம் அளவிலேயே வளர்ச்சியடையும். இவை ஏனைய இனங்களைவிட சிறியதான காய்களாக இருப்பதனால், குட்டையான இனம் என்று அழைக்கிறார்கள். இதன் காய்களும், வெண்சாம்பல் நிறமுடையனவாக இருக்கும். புடோலின் வகைகள் பற்றி பார்த்த நாம் இனி புடோல் செய்கை முறைகளைப் பற்றி நோக்குவோம்.

### தரைபண்படுத்தல்

தரையைக் கொத்தி, உழுது நன்கு பண்படுத்தவேண்டும், தரையைப் பண்படுத்தும்போது 5000 கி.கிராம்- 10,000 கி.கிராம்வரை நன்கு உக்கிய சேதனைப்பசளையை இட்டு மண்ணுடன் நன்கு கலந்துவிடவேண்டும். நீர் தேங்கக்கூடிய தரையாயின் அவசியம் வடிகால் அமைக்கப்படல்வேண்டும். காரணம் நீர்த்தேக்கம் புடோல் கன்றுகளை அழுகச் செய்துவிடும். 150cm x 150cm இடைவெளிகளில் பயிர் நடுவதற்கான நிலையங்களைக் குறித்தல்வேண்டும். பின்பு அந்த நிலையங்களில் நன்கு உக்கிய சேதனைப்பசளை யிட்டு, நிரப்புதல் வேண்டும்.

### நடுகைமுறை

சிறந்த புடோல் வித்துக்களை தேர்ந்தெடுத்து, ஒவ்வொரு நிலையத்திலும் 2-3 வித்துக்களை 3 செ.மீ ஆழத்தில் நாட்டி, நீர் வழங்கவேண்டும். வித்து முளைப்பதற்கு போதிய ஈரலிப்பு அவசியம். ஆகையால், நட்டு விதைமுளைக்கும் வரை ஒவ்வொரு நாளும் நீர்ப்பாச்சவேண்டும். பின்னர் 3-5 நாட்களிற்கு ஒருதடவை தரையின் தன்மைக்கு ஏற்ப

(6 ஆம் பக்கம் பார்க்க.....)

# காலத்தோடு போட்டிபோட்டு வெற்றிபெறும்

# வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்

**யாழ்.குடாநாட்டில் மிகநீண்ட காலமாக இயங்கி வருகின்ற, ஒரேயொரு சுருக்கெழுத்துக் கழகம் என்றால், அது வடமராட்சி சுருக்கெழுத்துக்கழகம் தான். இரண்டு தசாப்தகாலமாக இயங்கிவருகின்ற வடமராட்சி சுருக்கெழுத்துக்கழகம் பல மாணவர்களுக்கு தட்டெழுத்து, சுருக்கெழுத்து பயிற்சிகளை வழங்கி வருகின்றது.**

கல்விப் பொதுத் தராதர பரீட்சையில் சித்தி பெற்றவர்கள், வேலைவாய்ப்பு எதுவுமின்றி இருந்தவர்கள், க.வ.சிவச்சந்திரனின் கவனத்தை ஈர்ததார்கள். வேலைவாய்ப்பு எதுவுமில்லாமல் இருந்த இளைஞர், யுவதிகளுக்கு தொழில் பயிற்சி ஒன்றை வழங்கினால் என்ன என்ற சிந்தனை ஏற்பட்டது. அந்த சிந்தனையின் விளைவாக உதித்ததே தற்போதைய வடமராட்சி சுருக்கெழுத்துக்கழகம்.

வதிரி - கரவெட்டியில் அமைந்துள்ள இந்தச் சுருக்கெழுத்து கழகம், 1985 ஆம் ஆண்டு, 10 ஆம் மாதம், முதலாம் திகதி உருவாக்கப்பட்டது. சுருக்கெழுத்து, தட்டெழுத்து என்பவற்றுக்கான பயிற்சியை அளிப்பதை நோக்கமாகக்கொண்டு,



க.வ.சிவச்சந்திரன்

இந்தக்கழகம் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ், ஆங்கில சுருக்கெழுத்து - தமிழ், ஆங்கில தட்டெழுத்து ஆகியவற்றில் பயிற்சியைக் கொடுப்பதற்காக இந்தக் கழகம் அன்றிலிருந்து இன்றுவரை இயங்கிவருகின்றது.

இந்தக் கழகத்தில் ஆரம்பத்தில் சுருக்கெழுத்து மட்டுமே பயிற்றுவிக்கப்பட்டது. பின்னர் தட்டெழுத்தும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.

தனி ஒருவராலேயே உருவாக்கப்பட்ட இந்தக் கழகம் பின்னர், வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சில் பணிபுரியும் மாலினி ஆரோக்கியகுமாரைத் தலைவராகக் கொண்டு செயற்பட்டது. 1986 ஆம் ஆண்டிலிருந்து 1988 ஆம் ஆண்டுவரை இவரே தலைமை வகித்தார். 1988 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை மேலதிகக் காணிப்பதிவாளர் சி.குலசிங்கம் இந்தக் கழகத்திற்கு தலைவராகச் செயற்பட்டு வருகிறார். இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை இந்தக் கழகத்தின் புதிய அங்கத்தவர்கள் தெரிவு இடம்பெறும். எனினும் - தலைவர், செயலாளர் ஆகியோரைத் தவிர ஏனைய அங்கத்தவர்களே இவ்வாறு மாற்றம் செய்யப்பட்டு வருகிறார்கள்.

சுருக்கெழுத்து, தட்டெழுத்துப் பயிற்சிக்காக வரும் மாணவர்களிடம் பயிற்சி தொடங்கி, முடிகின்ற காலம்வரையும் அறவிடப்படுகின்ற கட்டணத்தொகை - ஆரம்பத்தில் 120 ரூபாவாக இருந்தது. தற்பொழுது 550 ரூபா வரையில் அறவிடப்படுகின்றது. இவ்வாறு அறவிடப்படுகின்ற தொகை ஒப்பீட்டளவில் குறைவானதாகும். 8 மாதத்தில் அல்லது ஒரு வருடத்தில் இந்தப் பயிற்சி நிறைவடைகின்றது. அந்தக் காலங்களுக்குரிய கட்டணமாகவே இத்தொகை பெறப்படுகின்றது.

கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சை எடுத்து, அதில் சித்திபெற்ற மாணவர்கள் இந்தப் பயிற்சிக்குச் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். இந்தப் பரீட்சையில் 3c பெற்றவர்கள் பயிற்சிக்கு அனுமதிக்கப்படுகிறார்கள். தமிழ் மொழி மூலம் பயிற்சிபெற வேண்டுமாயின், தமிழில் C சித்தி பெற்றிருக்க வேண்டும். ஆங்கிலமொழி மூலம் பயிற்சி பெற்றுக் கொள்ள, ஆங்கிலத்தில் C பெற்றிருக்க வேண்டும். விண்ணப்பம் கோருவதன்மூலமாக, மாணவர்கள் தெரிவு இடம்பெறுகின்றது. இதுதொடர்பாக கழகத்தில் யாப்பு முறையொன்று பின்பற்றப்படுகின்றது. இந்தக் கழகத்தின் காப்பாளராக கரவெட்டி பிரதேச செயலாளர் செயற்படுகின்றார்.

இந்தக் கழகத்தில் படித்தவர்கள், வேறு நிறுவனங்களில் ஆசிரியர்களாகச் சேர்ந்து கடமையாற்றுகின்றார்கள். அந்த வகையில், முறைசாராக்கல்வி நிறுவனங்களில் இவர்களது பணி பெரிதும் குறிப்பிடத்தக்கதாக அமைந்துள்ளது.

வடமராட்சி சுருக்கெழுத்துக்கழகம், ஒரு வரையறைக்குள் நின்றுகொள்ளவில்லை. இது சுருக்கெழுத்துத் தொடர்பான அறிவுப்போட்டிகளையும் நடாத்தி வருகின்றது. கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, தேவரையாளி இந்துக் கல்லூரி, வேலணை வைத்திலிங்கம் துரைசாமி மத்திய கல்லூரி ஆகியவற்றில் இயங்கிய முறைசாரக் கல்விப்பிரிவு ஆகியவற்றிலும், கோப்பாய் கல்வி மூலவள நிலையம் போன்ற பல்வேறு இடங்களிலும், ஒழுங்குசெய்து பொது அறிவுப் போட்டியினை வடமராட்சி சுருக்கெழுத்துக்கழகம் நடாத்துகின்றது.

இந்தக் கழகம் - தட்டச்சு, சுருக்கெழுத்து தொடர்பான அறிஞர்களின் நினைவு தினங்களை கொண்டாடியுள்ளது. ஆங்கில சுருக்கெழுத்தின் தந்தை - பிற்மன், தமிழ்ச் சுருக்கெழுத்தின் தந்தை - சீனிவாசராவ், ஆங்கிலத் தட்டெழுத்தின் தந்தை - கிறிஸ்தோபர் லதாம்சோல்வ், தமிழ்த் தட்டெழுத்தின் தந்தை - இராமலிங்கம் முத்தையா - ஈழத்தின் சுருக்கெழுத்தின் தந்தை - சின்னத்தம்பி இராமலிங்கம் ஆகியோரின் நினைவு தினங்களைச் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றது. தழிழ் தட்டெழுத்தின் தந்தை - இராமலிங்ம் முத்தையா தமிழர் என்பது, அவரது நினைவுதினம், இக்கழகத்தால் கொண்டாடப்பட்ட பின்னர்தான் அனேகருக்குத் தெரியவந்தது.

வடமராட்சி சுருக்கெழுத்துக்கழகம் தனித்த ஒரு கழகம் என்ற கருத்து நிலையைவிடுத்து, பல்வேறு தரப்பினருடன் சேர்ந்த வகையில், தனது பணியினை முன்னெடுத்துச் செல்கின்றது. மல்லாகம் இளைஞர்கழகத்துடன் இணைந்து வகுப்புக்களை நடாத்தியது. அதேபோல், கோப்பாய் மக்கள் நலன் காக்கும் பிரிவுடன் இணைந்து செயற்பட்டுள்ளது.

பல்வேறு இடங்களில் சுருக்கெழுத்துப் பயிலும் மாணவர்களுக்கான கருத்தரங்குகளையும், இந்த சுருக்கெழுத்துக்கழகம் நடாத்தியுள்ளது. இந்தக் கழகத்தில் கற்பிக்கின்ற பணியை மேற்கொள்வோர் சேவை அடிப்படையிலேயே இப்பணியைச் செய்கின்றனர். அவர்களுக்குச் சிறு ஊக்குவிப்புத் தொகையே வழங்கப்படுகின்றது. ஆரம்பத்தில் சிவச்சந்திரன் கற்பித்துள்ளார். பின்னர் அப்பணியை அவருடைய மாணவர்கள் செய்து வருகின்றனர். இவ்வாறு தொடர்ந்து கற்பித்தல் பணி ஒரு பரம்பரையாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மூன்றாம் நிலைக்கல்வி ஆணைக்குழு வடமராட்சி சுருக்கெழுத்துக்கழகப் பணிகளினை ஆய்வுசெய்து, சுருக்கெழுத்து, தட்டெழுத்துப் பயிற்சி வழங்கும் நிறுவனமாக இந்தக் கழகத்தைப் பதிவுசெய்துள்ளது.

வடமராட்சியின் பல்வேறு இடங்களிலும், வேறு சுருக்கெழுத்துகழகங்கள் பயிற்சிகளை நடாத்திவந்தாலும், இறுதிப் பரீட்சையை நடாத்துகின்ற பொறுப்பை வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்திடம் கொடுத்துள்ளன. இந்தக் கழகத்தில் பயிற்சி பெறுகின்ற பயிற்சியாளர்கள், பொது அலுவலகங்களுக்குச் சென்று, செயல்முறைப் பயிற்சியை மேற்கொள்கின்றார்கள். இந்தச் செயல்முறைப் பயிற்சிக்கு



அலுவலகங்களில் கொடுப்பனவு எதுவும் வழங்கப்படுவதில்லை. அப்பயிற்சிக்குச் செல்பவர்கள் அதனை எதிர்பார்ப்பதும் இல்லை.

இந்தக் கழகத்தின் வளர்ச்சிக்காக - லண்டனில் உள்ள ஸ்கொட் நிறுவனம் நிதியுதவி வழங்கியுள்ளது. அந்நிதியைக் கொண்டு தட்டச்சு இயந்திரங்களும், தளபாடங்களும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கழகம் தேவையான நிதியை லொத்தர் சீட்டிழுப்பின் மூலமாகவும் பெற்றுக் கொள்கின்றது. இந்தச் சீட்டிழுப்பு 2 வருடங்களுக்கு ஒருமுறை நடாத்தப்படுகின்றது.

தற்பொழுது இலங்கை வங்கியுடன் ஒப்பந்தம் ஒன்றையும் செய்துள்ளது. இந்த ஒப்பந்தத்தின்படி, வங்கியில் வேலைவழங்குவதற்கு அவர்கள் சம்மதித்துள்ளனர். பயிற்சி முடிந்தபின்னர், வங்கியில் காணப்படும் வேலைகளைச் செய்வார்கள். அவர்களுடைய சம்பளத்தை இலங்கை வங்கி கழகத்துக்கு அனுப்பும், கழகம் அவர்களுக்கு வழங்கும்.

எதிர்வரும் காலங்களில் கணினியை இயக்குகின்ற வகையில், தட்டெழுத்துப்பயிற்சி எவ்வாறு மேற்கொள்வது என்பது பற்றி ஆராய்ந்து வருகின்றது. கணினியை எவ்வளவு தூரம் விரைவாக இயக்கவேண்டும் என்ற பயிற்சிக்கு வழிகோலாக தட்டெழுத்துப் பயிற்சியை வழங்க தீர்மானித்துள்ளது.

கணினி பயிற்சிகளையும், எதிர்காலத்தில் நடைமுறைப் படுத்தவும் தீர்மானித்துள்ளது. மாறிவரும் மனித தேவைகளுக்கு ஏற்ப, தன்னை மாற்றிக்கொண்டு இயங்குகின்ற வகையில், பல்வேறு திட்டங்களையும் தன்னுள் கொண்டுள்ளது.

அரசாங்கத்தின் நிதியுதவிகள் எதுவுமின்றி, தனிக் கட்டட வசதிகளும் இல்லாமல் தனியார் வீடொன்றில் இயங்கிவருகின்ற இந்தக் கழகத்தின் பணிகள் மேலும் தொடர்வதற்கு ஒத்தாசை கொடுக்கவேண்டிய பொறுப்பு அனைவரதும் கடமையாகும்.

**பூலோகராஜா நகுலன்**

## வீட்டுத்தோட்டத்தில்...

*(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

நீர் பாய்ச்சவேண்டும். பொதுவாக பாத்திமுறைப் பாசனமேசிறந்தது. புடோல் - படரும் கொடியமைப்பு உடையதாலும், நீண்ட காய்களைக் கொண்டதாகையாலும் அவற்றை 1.8 மீற்றர் உயரமான பந்தலில் படரவிடவேண்டும்.

பயிரின் 4 வாரப்பருவத்தில், பந்தல் அமைக்கப்படல் வேண்டும். பந்தலின் இடைப்பரப்பு - தடிகளால் அல்லது கயிற்றால் (சதுரப்பின்னலாக) அமைக்கப்படல் வேண்டும். பந்தலின் உயரம்வரை தண்டில் தோன்றும் பக்க கிளைக்களை வெட்டி அகற்றவேண்டும். காய்கள் 15cm நீளமளவில் இருக்கும்போதே, வாழைநாரினால் காயின் நுனியில் சிறு கல்லினைக்கட்டித் தொங்கவிடவேண்டும். இதனால் காய்களின் நுனி சுருளாது பாதுகாக்கப்படும்.

### புடோலைத் தாக்கும் நோய்கள்

**பூஞ்சணநோய்**

இந்த நோயினால் பாதிக்கப்பட்ட பயிர் இலைகள் சித்திர வடிவமான தோற்றத்தைக் கொண்டிருக்கும். இந்நோயை ஏற்படுத்தும் வைரஸ் கிருமிகளின் காவிகளை, சிபார்சு செய்யப்பட்ட பூச்சிநாசினிகளைக் கொண்டு கட்டுப்படுத்தல் வேண்டும்.

**பீடைகள் - பழ ஈ**

காய்களின் மேற்பரப்பில் பழ ஈ தனது முட்டைகளை இடும். முட்டையிலிருந்து வெளிவரும் கீடம் (புழு) காய்களின் சதைப்பகுதியை உண்பதால், விரைவில் சேதம் ஏறபடுகின்றது. இதனைக் கட்டுப்படுத்த் பயிர்ச்சுழற்சியினை மேற்கொள்வதுடன். சிபார்சு செய்யப்பட்ட பூச்சி நாசினியை விசிறவேண்டும். மற்றும் துடுப்புக்கால் மூட்டு பூச்சி, ஒலகோபோரா வண்டு, அழுக்கணவன் என்பனவற்றாலும் பாதிப்புக்கள் ஏற்படலாம். பூச்சி நாசினிகளை சிபார்சுக்கேற்ப பயன்படுத்திக் கட்டுப்படுத்தல்வேண்டும்.

**அறுவடை**


பூரண வளர்ச்சி அடைந்த காய்களை, அவை முதிர்ச்சி அடையும் முன்னர் அறுவடை செய்தல்வேண்டும். நான்கு நாட்களிற்கு ஒருமுறை காய்களை அறுவடை செய்தல் வேண்டும். 4,000 சதுர மீற்றர் நிலப்பரப்பிலிருந்து 16,000 கி.கிராம் தொடக்கம் 20,000 கி.கிராம் வரையான காய்களை அறுவடை செய்யலாம்.

காய்கள் முறியாமலும், காயப்படாமலும் இருக்க, தென்னோலைகளில் கட்டி எடுத்துச்செல்லலாம்.

அதிக சந்தைவாய்ப்பையும், இலகுவான பயிர்ச்செய்கை முறையையும் கொண்ட புடோல் செய்கையின்மூலம், அதிக வருவாயினைப் பெற்றுக்கொள்ளமுடியும். இதைவிட வீட்டுத் தோட்டச் செய்கையிலும் செய்கை பண்ணக்கூடிய ஒரு இலகு பயிராகவும் புடோல் விளங்குகின்றது.

**இரா.காயத்திரி**

## குடாநாட்டு சந்தை நிலவரம்



| பொருட்கள் | சுன்னாகம் | நெல்லியடி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | திருநெல்வேலி | சங்கானை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 30/= | 40/= | 30/= | 30/= | 50/= | 40/= | 50/= |
| வெண்டிக்காய் | 30/= | 30/= | 15/= | 20/= | 20/= | 20/= | 30/= |
| உருளைக்கிழங்கு | 60/= | 70/= | 65/= | 70/= | 65/= | 60/= | 80/= |
| கத்தரிக்காய் | 60/= | 50/= | 60/= | 50/= | 60/= | 50/= | 50/= |
| பாகற்காய் | 30/= | 60/= | 80/= | 80/= | 70/= | 65/= | 70/= |
| கரட் | 40/= | 60/= | 30/= | 40/= | 50/= | 45/= | 50/= |
| பீற்றூட் | 20/= | 30/= | 15/= | 25/= | 20/= | 30/= | 30/= |
| முருங்கைக்காய் | 30/= | 70/= | 30/= | 20/= | 30/= | 50/= | 70/= |
| வெங்காயம் | 35/= | 40/= | 40/= | 30/= | 35/= | 38/= | 40/= |
| பச்சை மிளகாய் | 40/= | 60/= | 40/= | 40/= | 50/= | 40/= | 50/= |

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*சிறுகாப்பின் பேரிடத்தது ஆகி உறுபகை*
*ஊக்கம் அளிப்பது அரண்*

-திருக்குறள்.

## நமது நோக்கு

## அதிகாரப் போட்டியில் அழிவது அமைதியே...!

சிறிலங்காவின் ஜனாதிபதி சந்திரிகா, முப்படைத்தளபதி என்ற வகையில், தனக்கிருக்கும் அதிகார வலுவின் ஆற்றலை மீண்டும் ஒருமுறை நிருபித்துள்ளார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவரை நாட்டை விட்டு வெளியேற்றுமாறு, நோர்வேப் பிரதமருக்கு ஜனாதிபதி கடிதம் ஒன்றை அனுப்பியதைத் தொடர்ந்து, இனிமேல் கண்காணிப்புக்குழுவின் உத்தரவு எதையும் கருத்திற்கொள்ளாது, சுயாதீனமாகச் செயற்படுமாறும் பாதுகாப்புப் படையினருக்கு கட்டளை பிறப்பித்திருந்தார்.

அத்துடன், கண்காணிப்புக் குழுவின் தற்போதைய தலைவர் மேஜர் ஜெனரல் ரெலவ்சனுடன் முப்படையினரோ, பொலிஸாரோ இனிமேல் எந்தத் தொடர்பையும் வைக்கக்கூடாதெனவும், ஜனாதிபதி சந்திரிகா பணிப்புரையும் விடுத்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து, எப்போதும் ஜனாதிபதியின் முழு ஆசீர்வாதத்திற்கும் உரியவரான இராணுவத் தளபதியும், அண்மையில் கூட்டுப்படைகளின் தலைமை அதிகாரியாக சந்திரிகாவால் அரசின் உடன்பாடின்றியே நியமனம் செய்யப்பட்டவருமான - லெப்ரினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல அவர்கள் ஜனாதிபதியின் இந்த உத்தரவு, படைத்தரப்பினரால் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்று உறுதிபடத் தெரிவித்துள்ளமையானது, ஜனாதிபதியின் அதிகார உத்தரவானது - எந்தளவில் படைத்தரப்பால் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதைத் தெளிவாக்குவதாக உள்ளது.

ஜனாதிபதி எந்தளவு அதீத அதிகார பலத்தைக் கொண்டவராக இருந்தாலும் சரி, ஒரு சர்வதேச அனுசரணையுடனான அரசின் செயற்பாடுகளில் - அரசுடன் ஒரு முறையான கலந்துரையாடல், ஆலோசனைகளை மேற்கொள்ளாது, தன்னிச்சைப்படி குறுகிய அரசியல் அபிலாஷைகளின் அடிப்படையில் தலையீடு செய்து, தனது ஆளுமையைக் காட்டநினைப்பது, ஒரு சிறந்த கண்ணியமான அரசியல் மற்றும் நாட்டுத் தலைவருக்குரிய பண்பேயல்ல.

ரெலவ்சன் அவர்களை வெறுமனே கண்காணிப்புக் குழுவின் ஒரு சாதாரண தலைவராகப் பார்க்காது, நாட்டுக்கு மிக நெருக்கமான நட்புறவு நாடொன்றின் இராஜதந்திரி என்றவகையில் - அவரைக் கண்ணியமாக அழைத்துப் பேசி, பிரச்சினைகள் குறித்து அலசியிருக்கவேண்டும். அதுவே 'அதி உத்தம' என்ற கௌரவ அடைமொழியுடன் அழைக்கப்படும் ஒரு அறிவார்ந்த ஜனாதிபதிக்கு ஒரு பண்பாகும்.

அல்லது பிரதமருடனாவது, அதுகுறித்து விவாதித்திருக்கவேண்டும். அதனையும் அவர் மேற்கொள்ளவில்லை.

பிரதமரும் இந்த நாட்டின் மக்களால் தெரிவு செய்யப்பட்ட, அதுவும் ஜனாதிபதியின் தலைமையிலான பொதுஜன ஐக்கியமுன்னணியைத் தோற்கடித்ததன் மூலம் தெரிவுசெய்யப்பட்ட ஒருவர் என்பதைக்கூட ஜனாதிபதி மறந்து, அகங்காரத்துடன் செயற்பட்டமைதான் அவரின் பலவீனத்தை வெளிச்சம் போட்டுக்காட்டுகின்றது.

கண்காணிப்புக் குழுவோ, அதன் தலைவரோ சுயாதீனமாகவோ, தன்னிச்சையாகவோ செயற்படுவதில்லை. அதேசமயம் பக்கச்சார்பாகவும் அவர்கள் இயங்கிவிடமுடியாது. அரசுடனும், படைத்தரப்புடனும், விடுதலைப் புலிகளுடனும் பிரச்சினைகளின் சகல அம்சங்களையும் ஆராய்ந்தே முடிவெடுக்கின்றனர் என்பதும் தெரிந்தவிடயமே.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் நடவடிக்கைகள் அனைத்துமே சமாதான நகர்வுகளுடன் தொடர்புடைய, அதில் அக்கறை கொண்ட, சர்வதேச சமூகத்தினால் அவதானிக்கப்பட்டும் வருகின்றன.

இந்தநிலையில் - கண்காணிப்புக்குழு மீதும், அதன் தலைவர் மீதும், சந்திரிகா சுமத்திய குற்றச்சாட்டுக்களுக்கும் இன்னமும் அவர் சரியான வலுவான ஆதாரங்களை முன்வைக்கவேயில்லை.


அவரின் முழுநோக்கமும் ஏதோவோர் மூலோபாயத்தை பயன்படுத்தி அரசுக்கும், அரசு முன்னெடுக்கும் சமாதான முயற்சிகளுக்கும், இடையூறை ஏற்படுத்துவதேயாகும். இதனை அவர் மறுத்தாலும் இதுதான் உண்மை.

அதேசமயம், தான் இன்னமும் அதிகார வலு ரீதியில் தேசியமட்டத்தில் - உச்சநிலையில் இருப்பதை நிரூபிக்க வேண்டிய நிலையில் இருப்பதை வெளிப்படுத்திக்கொண்டே இருக்கவேண்டிய தேவையும் அவருக்கு இருக்கிறது.

ரணில் விக்கிரமசிங்க சர்வதேச மட்டத்தில் அவருக்குள்ள ஆதரவுப் பலத்தை, பல வகையிலும் விஸ்தரித்துக் கொண்டே, தனது அரசியல் பலத்தை ஸ்திரப்படுத்த முயன்றுவரும் வேளையில், சந்திரிகா தேசியரீதியில் தனது அடையாளத்தை உறுதிப்படுத்த தீவிரம் கொண்டுள்ளார் என்பது தெளிவு.

இந்த அதிகாரப் போட்டியில், வெல்வது யாராக இருந்தாலும், தோற்பது சிறிலங்காவின் சமாதானத்தின் எதிர்காலமும் அமைதியும்தான்.

## நாடும் நடப்பும்




# வடக்கு - கிழக்கு இணைப்புக் குறித்து சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதா?

## ஜனாதிபதியிடம் தேர்தல் ஆணையாளர் கேள்வி

வடக்கு - கிழக்கு மாகாண இணைப்புக்குறித்து சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதா? அல்லது அதனை ஒத்திவைக்க நடவடிக்கை எடுப்பதா? என்பது தொடர்பாக ஜனாதிபதியின் நிலைப்பாட்டை அறிவிக்குமாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க கோரியுள்ளார்.

வடக்கு - கிழக்கு இணைப்புக் குறித்து, சர்வஜன வாக்கெடுப்புத் தொடர்பான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, தனது நிலைப்பாடை இன்னும் தேர்தல் ஆணையாளர் திஸநாயக்கவிற்குத் தெரிவிக்கவில்லை.

இதனால், எதிர்வரும் 17 ஆம் திகதி நடாத்தப்படவேண்டிய வடக்கு - கிழக்கு இணைப்புக் குறித்த சர்வஜனவாக்கெடுப்பை, நடத்துவதா அல்லது மேலும் ஒரு வருடத்திற்கு ஒத்திவைப்பதா என்பது குறித்த முடிவுகளையும், தேர்தல் திணைக்களம் எடுக்கமுடியாதநிலையில் இருந்துவருகிறது.

இதனால், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நிலைப்பாட்டை, விரைவில் தெரியப்படுத்துமாறு, ஜனாதிபதி சந்திரிகாவின் செயலாளரை - தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க கேட்டிருந்தார்.

ஜனாதிபதியின் நிலைப்பாட்டை விரைவில் தெரியப்படுத்துவதாக அவரது செயலாளர் உறுதியளித்தபோதும், இதுவரை இந்த விடயம் குறித்து தேர்தல் திணைக்களத்திற்கு அறிவிக்கவில்லை. எந்தவிதமான அறிவித்தலும் கொடுக்கப்படவில்லை

1987 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தற்காலிகமாக இணைக்கப்பட்ட பின்னர், வருடாந்தம் இந்த இணைப்புத் தெடர்பான சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுவது ஒத்திவைக்கப்பட்டு வந்தது.

ஆனால், அண்மையில் வடக்கு - கிழக்கை இணைப்பது குறித்து ஜனாதிபதி சந்திரிகா தீர்மானித்துள்ளதாகச் செய்திகள் வெளிவந்தநிலையில், சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுமா? அல்லது மீண்டும் ஒத்திவைக்கப்படுமா, என்ற சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

எதிர்வரும் 14 ஆம் திகதியுடன் வடக்கு-கிழக்கு இணைப்புத் தொடர்பான காலஎல்லை முடிவடையவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## வன்னிக்குச் செல்ல அனுமதிக்கவேண்டுமெனக்கோரி தொண்டமானின் மெய்ப்பாதுகாவலர்கள் வாக்குவாதம்

(கொழும்பு)

அமைச்சர் தொண்டமானின் மெய்ப்பாதுகாவலர்கள் தம்மையும் வன்னிக்கு அனுமதிக்கக்கோரி ஓமந்தை இராணுவத்தினருடன் நேற்றுமுன்தினம் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளைச் சந்திப்பதற்காக அமைச்சர் தொண்டமானும், அவரது குழுவினரும் நேற்றுமுன்தினம் வன்னிப் பகுதிக்குச் சென்றார்கள்.

அமைச்சர் தொண்டமானின் பாதுகாப்பு அதிகாரிகளான 15 விமானப்படை அதிகாரிகளும் ஓமந்தைப் பகுதிவரையும் வந்துள்ளார்கள். அமைச்சரோடு தங்களை வன்னிப் பகுதிக்கு அனுமதிக்கவேண்டும் என்றுகோரி, ஓமந்தைப் பகுதி இராணுவத்துடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

15 விமானப்படையினரும் துப்பாக்கிகளோடு வன்னிப் பகுதிக்குச் செல்வதற்காகவே இவ்வாறு அனுமதியை வழங்குமாறு கேட்டிருந்தனர். இராணுவ அதிகாரிகள் - இந்த விமானப்படையைச் சேர்ந்த 15 பேரும், வன்னிப்பகுதிக்குச் செல்ல முடியாது என்பதைத் தகுந்த நியாயங்கள் கொண்டு விளக்கிய பின்னர், இராணுவத்தினருக்கும், விமானப்படையினருக்கும் இடையிலான வாக்குவாதம் தணிந்தது.

அமைச்சர் தொண்டமானின் மெய்ப்பாதுகாவலர்கள் 15 பேரும், திரும்பவும் வவுனியாப் பகுதிக்குச் சென்றனர். இதன் பின்னரே அமைச்சர் தொண்டமான் வன்னிப்பகுதிக்குச் சென்றார். (01)

## ஜனாதிபதி சந்திரிகாவின் விசேட செய்தி அனைத்து வீடுகளுக்கும் அனுப்பப்படும்!

(கொழும்பு)

ஜனாதிபதி நாட்டிலுள்ள அனைத்து மக்களின் வீடுகளுக்கும் விசேடசெய்தி ஒன்றினை அனுப்பவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த மாதம் 8 ஆம், 9 ஆம் திகதிகளில் இவ்வாறு விசேடசெய்தியை மக்களின் வீடுகளுக்கு - ஜன்ாதிபதி அனுப்பவுள்ளார்.

ஜனாதிபதியின் விசேடசெய்தியை, ஒவ்வொரு தொகுதி பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களும் கொண்டு செல்வார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கூடாக வழங்கப்படும் இந்தச் செய்தி - மக்களின் கைகளுக்கு நேரடியாக நாடாளுமன்ற உறுப்பினர்களால் வழங்கப்படவுள்ளது.

அண்மையில் பொதுஜன ஐக்கிய முன்னணி 'பொறுத்தது போதும்' என்ற தலைப்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்த வகையில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயற்பாடுகளை எவ்வாறு விரிவுபடுத்தலாம் என்பது தொடர்பாக, ஜனாதிபதி மாளிகையில் நடாத்தப்பட்ட விசேடகூட்டம் ஒன்றில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

## ஐ.தே.கவின் சம்மேளன மாநாடு டிசம்பரில் நடைபெறவுள்ளது!

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் சம்மேளன மாநாடு டிசம்பர் மாதம் 13ஆம் திகதி நடைபெவுள்ளது.

கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார்.

இந்த மாநாட்டில் வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் சகல பகுதிகளில் இருந்தும் கட்சிகளின் பேராளர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். இந்த மாநாட்டில் கலந்துகொள்ள ஏனைய கட்சிகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## சிறைச்சாலை அதிகாரிகளிடம் நட்டஈடுகோரி வழக்குத்தாக்கு!

உயர் நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டையடுத்து, சிறைத்தண்டனை பெற்று விடுதலையான அந்தனி இமாலு வேல் என்ற நபர் - பொலிஸார் மீது தாக்கல் செய்த மனு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 6 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளபோது, இவர் மீது தாக்குதல் நடத்தியதாகக் கூறப்பட்டு, இரண்டு சிறைச்சாலை அதிகாரிகள் மீது இந்த நபர் வழக்குத்தாக்கல் செய்திருந்தார்.

சிறைச்சாலை அதிகாரிகளைப் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டு, இவர்களிடமிருந்து தலா 10 லட்சம் ரூபா நட்டஈடு பெற்றுத்தரவேண்டும் என்று இந்த மனுவில் மனுதாரர் கூறியுள்ளார். (01)

# சமாதானப் பேச்சுக்களை கேள்விக்குறியாக்கும்

# இந்திய - இலங்கை புதிய ஒப்பந்தம்

மெல்போனிலிருந்து சபேசன்

தற்காலிமாக இடை நிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகள் -மீண்டும் எப்போது ஆரம்பமாகப் போகின்றன, என்ற பேச்சுத்தான் - இப்போது பலராலும் பேசப்பட்டு வருகின்றது. தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைக்குரிய தீர்வைச் சமாதானப் பேச்சுக்களின்மூலம் பெறலாம் என்ற நம்பிக்கை இன்னும் உயிரிழந்து போய்விடவில்லைத்தான். இம்மாத இறுதியில். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வழங்கவிருக்கும் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்குரிய திட்ட வரைபினை, அரசு ஏற்றுக்கொள்ளும், ஏற்றுக்



கொள்ள வேண்டும் என்று, சமாதான விரும்பிகள் எதிர்பார்த்திருப்பதையும் நாம் காணக் கூடியதாக உள்ளது.

ஆனால் நீதியான, நியாயமான, நிரந்தரமான, கௌரமான சமாதானத் தீர்வு ஒன்றைச் சிங்களத் தலைமைகள் தமிழினத்திற்கு வழங்குமா? என்ற ஐயப்பாடு எழுவதையும் தவிர்க்க முடியாமல்தான் இருக்கின்றது. சிங்களத்தின் ஆளும்கட்சி, எதிர்க்கட்சி மற்றும் வெளிப்படையான சிங்கள இனவாதக் கட்சிகள் மட்டுமல்ல, சில வெளிநாட்டுச் சக்திகளும்கூடத் தமிழினத்திற்கு நீதியும், நியாயமும் கிடைப்பதற்குத் தடையாக இருக்கின்றன என்ற கருத்தும் அண்மைக் காலத்தில் வலுப்பெற்று வருகின்றது.

தற்போது இலங்கைக்கும் - இந்தியாவுக்குமிடையே ஏற்பட்டுள்ள பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தமும், இந்தக் கருத்தை வலுவாக்குவதாகவே அமைந்துள்ளது. இன்று சிங்கள அரசு - தமிழீழ விடுதலைப் புலிகளோடு சமாதானப் பேச்சுக்களை நடாத்துவதற்கு - தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ வெற்றிகளும், இராணுவப் பலமும்தான் காரணமாக அமைந்தன. இராணுவ சமநிலையினூடாக இரண்டு தரப்பினரும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் வேளையில், புதிதாக இலங்கை -இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்று உருவாக்கப்படுவதானது, நியாயமான சந்தேகத்தை ஏற்படுத்துவதில் ஆச்சரியமில்லை.

இதுதவிர, இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் எந்தவொரு வெளிநாட்டு அச்சுறுத்தல்களையோ அல்லது அத்துமீறல்களையோ இவளவு காலமும் இலங்கை எதிர்நோக்கியிருக்கவில்லை. மாறாக, உள்நாட்டுப் போரைத்தான் இலங்கைத்தீவு கண்டு வந்துள்ளது. இந்த இரண்டு தேசிய இனங்களுக்கிடையேயுள்ள முரண்பாட்டைச் சமாதானப் பேச்சுக்களூடே தீர்ப்பதற்கான முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இவ்வேளையில், திடீரென்று ஏற்படுத்தப்பட்டுள்ள இலங்கை- இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம், தமிழ் மக்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதில் வியப்பில்லை.

அரசாங்கம் இதய சுத்தியுடனும், நம்பிக்கையுடனும் சமாதானப் பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுவதாக இருந்தால், இன்றைய சூழ்நிலையில் இத்தகைய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டியதேவை இருக்காது என்று தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ள கருத்துக்கள், கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவையாகும்.

தமிழீழ மக்களின் தேசிய பிரச்சினைக்குரிய தீர்வை, சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஊடாக தீர்க்கலாம் என்ற கருத்துக்கு, செயலுருவம் கொடுப்பதாயின் - அதனை நாம் இரண்டு முக்கிய கட்டங்களாகப் பிரித்துத் தர்க்கிக்க விரும்புகிறோம். இரண்டு தசாப்த காலத்திற்கு மேலாகச் சிங்கள அரச பயங்கரவாதத்திற்கு முகம் கொடுத்து வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழினத்தின் வாழ்க்கை - முதலில் இயல்புநிலைக்குத் திரும்புவதற்கு இந்த சமாதானப் பேச்சுக்கள்தளம் அமைத்துக் கொடுக்க வேண்டும். புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, கையெழுத்திடப்பட்ட விடயங்களை - அரசு முழுமையாக நிறைவேற்ற வேண்டும். போரினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழர் தேசத்தின் புனரமைப்பு, புனர்நிர்மாண அபிவிருத்திற்குரிய நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். இந்தச் சமாதானக் காலத்திற்குரிய முழுமையான பயனைத் தமிழினம் பெறவேண்டும். அதனை அடைவதற்கான முதற்கட்டச் செயற்பாடுதான் இடைக்கால நிர்வாக கட்டமைப்பு.

தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினையை இந்தச் சமாதானப் பேச்சுக்கள் நிரந்தரமாகத் தீர்த்து வைப்பதற்கு, முதலில் இந்த முதற்கட்டம் சரியாக, முழுமையாக நிறைவேற்றப்படவேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தரவிருக்கின்ற இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்குரிய வரைபினை - அரசு ஏற்றுக்கொள்வது மட்டுமன்றி, உடனடியாக அதனை நடைமுறைப்படுத்தவும் வேண்டும். இதுவே தமிழரின் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய, இரண்டாம் கட்டத்திற்குப் போடப்படக்கூடிய சரியான அத்திவாரமாகும்.

இந்தவேளையில், எம்முடைய கருத்தொன்றை வலியுறுத்த விரும்புகிறோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வழங்கவிருக்கின்ற இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்குரிய திட்டவரைபு என்பது, ஓர் அரசியல் தீர்வு அல்ல என்பதை மீண்டும் வலியுறுத்துவது அவசியமாகும். இந்த இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு என்பது, தமிழீழ மக்களுக்குரிய பூரண சுதந்திரத்தைத் தந்து, அவர்களுடைய தேசியப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்த்து வைக்கக்கூடிய திட்டமுமல்ல இந்த இடைக்கால நிர்வாகம் என்பது. இடைக்காலத்திற்காகத்தான் சுமாதானப் பேச்சுவார்த்தைகளின் முதற்கட்டமான இந்த இடைக்கால பேச்சு வார்த்தைகளினூடே, தமிழ் மக்களின் வாழ்க்கையை இயல்புநிலைக்குக் கொண்டுவருவதோடு, வட - கிழக்குப் பகுதிகளில் புனரமைப்பு, புனர்நிர்மாண அபிவிருத்திப் பணிகளை முறையாக, ஊழல் அற்ற நிர்வாகத்தினூடாக, விரைவாகச் செய்வதற்குரிய அதிகாரங்களை முழுமையாகப் பெறுவதற்காகத்தான், இந்த இடைக்கால நிர்வாக திட்டவரைபை விடுதலைப் புலிகள் வரைந்துள்ளார்கள்.

இந்த இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை - தமிழ் மக்களுக்கு வழங்குவதற்கு எதிராக, இப்போதே சந்திரிகா அம்மையார் உட்படப் பல சிங்கள - பௌத்த பேரினவாத சக்திகள் எதிர்க்க ஆரம்பித்துவிட்டன. இந்த இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கு எதிராக ஓர் அழுத்தத்தைக் கொடுப்பதற்காகத்தான், தனது பங்கிற்கு ரணில் விக்கிரமசிங்கவும் இந்தியாவுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளார் என்று கருத இடமுண்டு. ஜனாதிபதி சந்திரிகா இந்த ஒப்பந்தத்தை வரவேற்று இருப்பதானது, இந்தக் கருத்துக்கு வலிமை சேர்க்கின்றது. சமாதானத்தீர்வின் முதற்கட்டச் செயற்பாடான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பே இந்தப் பாடுபடும்போது, இரண்டாம் கட்டச் செயற்பாடு எவ்வாறு நிறைவேற்றப்படப் போகின்றது என்ற கேள்வியும் எழுவது இயல்பானதே.

தமிழீழ மக்களாகிய ஒரு தேசிய இனம்- தனது தாயக நிலத்தில் தம்மைத்தாமே ஆளக்கூடிய பூரண சுயாட்சி அதிகாரத்தை, சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளக்கூடிய மிகமுக்கியமான தீர்வுதான் இரண்டாவது கட்டச் செயற்பாடு என்றே கருதவேண்டும். தமிழீழ மக்களின் முக்கியமான தேசியப் பிரச்சினையான இந்த விடயம் குறித்து, சிங்கள - பௌத்த பேரினவாத சக்திகள் எவ்வாறு நடந்து கொள்வார்கள் என்பதை உங்களின் ஊகத்திற்கே விட்டுவிடுகின்றோம்.

இதுகாறும் கூறிய கருத்துக்களின் அடிப்படையில் சில தர்க்கங்களை இங்கே முனவைக்க விரும்புகிறோம்.

இலங்கைத்தீவின் அரசியல், பொருளாதார விடயங்களில் இந்தியா அணுகிய, அணுகுகின்ற முறைகள் கண்டனத்திற்குரியவையாகும். ஒரு கண்ணில் வெண்ணெயையும், ஒரு கண்ணில் சுண்ணாம்பையும் தடவுகின்ற பாணியில்தான், இந்தியா இதுவரை நடந்துகொண்டு வந்துள்ளது. தான் சுண்ணாம்பு தடவுவதாக இந்தியா நினைப்பது, தமிழர்களின் கண்தான் என்றபோதும், இந்தச் சுண்ணாம்பு தடவலுக்குத் தமிழீழம் அனுமதிக்காது என்பதையும் இந்தியா புரிந்துகொள்ள வேண்டும்.

இந்தவேளையில், பழைய இந்திய- இலங்கை ஒப்பந்தத்தை நினைவு கூருவது பொருத்தமாகும். இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் மிகப்பெரிய அடிப்படைத் தவறு என்னவென்றால், அந்த ஒப்பந்தம் சம்பந்தப்பட்டவர்கள் சம்பந்தப்படாமல் செய்ததுதான். எந்தத் தமிழினத்தின் தேசியப் பிரச்சினை முறையாகத் தீர்க்கப்படவேண்டுமோ, அந்தத் தமிழினமோ - அதன் பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளோ அந்த ஒப்பந்தத்தில் நேரடியாகச் சம்பந்தப்படவில்லை. மாறாக அது இரண்டு ஆதிக்க சக்திகளுக்கிடையேயான (இந்தியா-இலங்கை) ஒப்பந்தமாக உருவாகியது, பின்னர் உருக்குலைந்தது.

அதேபோல், இன்று இந்தியா போடுகின்ற எந்த ஒரு ஒப்பந்தமும் - சம்பந்தப்பட்டவர்களையோ அல்லது அவர்களது நலன்களையோ கருத்தில் கொள்ளாமல் போடப்படுவதை கவலையுடன் கவனிக்கவேண்டியுள்ளது. அது திருகோணமலை எண்ணெய்க் குதமாக இருந்தாலும் சரி, வேறு எந்த பொருளாதார - பாதுகாப்பு விடயமாக இருந்தாலும் சரி, அவை தமிழீழத்தின் நலனைக் கருதாமல், தமிழீழத்தின் பிரதிநிதிகளைப் புறக்கணிப்பதாக இருந்தால், அவை பயனற்றவையாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அது அமெரிக்காவிற்கும் பொருந்தும்.

அன்று எவ்வாறு அடிப்படைப் பிரச்சினையைப் புரியாமல் இந்தியா ஓர் ஒப்பந்தத்தை திணிக்க முயன்றதோ, அதேபோல் மீண்டும் ஒரு பிரச்சினை உருவாகக்கூடிய அபாயத்தை



நாம் இங்கே உணரக்கூடியதாக உள்ளது. இன்று நோர்வே உட்பட, மற்றைய வல்லரசு நாடுகளும் - ரணில் அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான சமாதானப் பேச்சுக்களில் மட்டும்தான் கவனத்தைச் செலுத்துகின்றன. ஆனால், இந்த சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு எதிராக இப்போதே பிரசாரமும், ஆர்ப்பாட்டமும் செய்து வருகின்ற சந்திரிகா அம்மையாரின் கட்சியோ, ஜே.வி.பி போன்ற மற்றைய சிங்கள இனவாத கட்சிகளோ உருவாக்கக்கூடிய அபாயத்தை இந்த நேச நாடுகள் கண்டு கொள்வதாகவில்லை அல்லது கண்டுகொள்ள விரும்பவில்லை.

இந்த சமாதான விரும்பிகளான உலக நாடுகள் - இலங்கையின் இந்த இனவாதக் கட்சிகளுக்கு முறையான அழுத்தம் கொடுக்காமற் கொண்டுவரக்கூடிய எந்தத் தீர்வும், எதிர்காலத்தில் பயனளிக்காது. இதுவும் இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் இன்னொரு பிரதியாகவே மாறக்கூடிய அபாயம் உண்டு.

கடந்தகால வரலாறு - தமிழினத்திற்குப் பல பாடங்களைப் புகட்டியுள்ளது. அதனை வரலாற்றின் எச்சரிக்கை என்றும் எடுத்துக் கொள்ளலாம். அன்றிலிருந்து இன்றுவரை மாறிமாறி வந்த சிங்கள அரசுகளும், சிங்களத் தலைமைகளும் - தமிழினத்தை ஏமாற்றியே வந்துள்ளன. சிங்கள - பௌத்த பேரினவாத சக்திகளால் - தமிழீழ மக்களும், அவர்களது பிரதிநிதிகளும் வந்ததைத்தான் சரித்திரம் சான்றுகாட்டி நிற்கின்றது.

இன்று இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்து, தமிழீழ விடுதலைப் புலிகள் திட்டவரைபு ஒன்றை வழங்குவதற்கு முன்னராகவே, வெளிநாட்டுச் சக்திகள் அதனை விமர்சிக்க ஆரம்பித்துவிட்டன. இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்து, விடுதலைப் புலிகள் தெரிவிக்கவிருக்கும் திட்டமானது, நியாயமானதாக இருக்கவேண்டும் என்றும், யதார்த்தமாக இருக்கவேண்டும் என்றும் அமெரிக்கா, கனடா, இந்தியா போன்ற நாடுகள் கருத்து வெளியிட்டுள்ளன.

இரண்டு தசாப்த காலத்திற்கும் மேலாக சிங்கள அரச பயங்கரவாதத்தில் சிக்கித் தமிழினம் தவித்துக்கொண்டிருந்தபோது, நியாயம், நீதி, யதார்த்தம் என்ற சொற்றொடர்களை இந்த வெளிநாடுகள் எண்ணிப் பார்க்கவுமில்லை, எந்தவித ஆறுதலும்கூறிவிட முன்வரவுமில்லை. ஆனால், சமாதான காலத்திற்குரிய பயனை அடையவேண்டும் என்று ஓரினம் எதிர்பார்க்கத் தொடங்கியுள்ள இவ்வேளையில்தான் - நியாயம் என்றும், யதார்த்தம் என்றும் இந்த உலக நாடுகள் பேசத் தொடங்கியுள்ளன.

தமிழீழ மக்கள் இன்று நியாயத்தை நாடி நிற்கிறார்கள். அவர்கள் மீது இதுவரை காலமும் சிங்கள அரசுகளால் திணிக்கப்பட்ட கொடுமை நிறைந்த வாழ்க்கை - யதார்த்தத் திற்கு அப்பாற்பட்டது. தமிழ் மக்களின் பிரதி நிதிகளான விடுதலைப் புலிகள் - தமிழ் மக்களுக்கு அவர்கள் நாடி நிற்கின்ற நியாயத்தைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். அது தமிழீழ விடுதலைப் புலிகளின் கடமையுமாகும். தமிழ் மக்களுக்குரிய நியாயத்தைப் பெற்றுக் கொடுப்பதில்தான் விடுதலைப் புலிகள் அக்கறை காட்டுவார்களே தவிர, இந்த உலக நாடுகளின் அறிக்கைகள் குறித்து அவர்கள் அலட்டிக் கொள்ளப்போவதில்லை.

நியத்தையும், யதார்த்தத்தையும் பற்றிப் பேசுகின்ற இந்த உலக நாடுகள் - முதலில் இலங்கையின் அரசியல் யாப்புக் குறித்துக் கவனத்தைச் செலுத்தவேண்டும். சிங்கள பௌத்த பேரினவாதத்தைக் கட்டிக்காப்பதற்கென்றே உருவாக்கப்பட்ட யாப்புதான், உண்மையில் நியாயமற்றது ஆகும். இன்றைய உலக அரசியல் வாழ்வின் யதார்த்தத்திற்கு முரணானதும் இந்த அரசியல் யாப்புத்தான். இன்றைய பிரச்சினைகளுக்கு மூலகாரணிகளாக இருப்பவற்றில், முக்கியமானது இலங்கையின் அரசியல் யாப்பேயாகும். ஆகவே, இந்த அரசியல் யாப்பினை முற்றாக - முழுதாக மாற்றுவது குறித்தே உலக நாடுகள் சிந்திக்கவேண்டும்.

எனவே, மீண்டும் போர் வெடிக்காமல் சமாதானப் பேச்சுக்கள் ஊடே, நியாயமான தீர்வு கிடைக்கவேண்டுமென்றால், அதற்குறிய செயற்பாடுகள் சிங்களத்திடமிருந்தே வரவேண்டும். சிங்கள அரசியல் தலைமைகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு ஆதரவாக ஒருங்கிணையவேண்டும். விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பின் திட்டவரைபு ஏற்றுக்கொள்ளப்பட்டு, முறையான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்படவேண்டும். சிங்களத்தின் அரசியல் யாப்பு முற்றாக மாற்றப்பட்டு, தேசிய இனமான தமிழினத்திற்குச் சுயநிர்ணய உரிமை வழங்கப்படவேண்டும். இவை யாவும் கட்டம் கட்டமாக நிறைவேற்றப்படுவதற்கான முயற்சிகள் உடனே எடுக்கப்படவேண்டும். இவற்றிற்குரிய அரசியல் அழுத்தங்களை இலங்கை மீது உலக நாடுகள் பிரயோகிக்க வேண்டும். இது ஒன்றுதான் பிரயோசனமான வழியாகும். இன்றைய சமாதானப் பேச்சுவார்த்தைகள் வெற்றி பெறவேண்டுமென விரும்பிகின்றவர்கள் - இந்த யதார்த்த நிலையைப் புரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.

# ஈராக்கில் நடைபெறும் தாக்குதலால் அமெரிக்கா அச்சமடைய மாட்டாது!

## அதிபர் புஷ் தெரிவிப்பு

ஈராக்கில் நடைபெறும் தாக்குதல்களால் அமெரிக்கா அச்சம் அடையப் போவதில்லை எனத் தெரிவித்தார் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ். சதாமின் ஆதரவாளர்களாலும், அந்நிய நாட்டுத் தீவிரவாதிகளாலுமே இந்தத் தாக்குதல்களை மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அமெரிக்காவில் செப்ரெம்பர் 11 இல் நடைபெற்ற தாக்குதலுடன் தற்போது ஈராக்கில் நடைபெறும் தாக்குதல்களையும் அதிபர் புஷ் ஒப்பிட்டுப் பேசினார்.



மேலும், சிரியா, ஈரான் ஆகிய நாடுகளின் எல்லைகள் ஊடாக போராளிகள் ஈராக்கிற்குள் நுழைகின்றனர்.


ஈராக் எல்லைப் பகுதிகளில் கூடுதலான தடைகளை உருவாக்குவதற்கும், கண்காணிப்பை அதிகரிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது எனவும் புஷ் மேலும் தெரிவித்தார்.

தாக்குதல் நடத்தப்பட்ட முறை ஈராக்கியர் அல்லாதவர்கள் சம்பந்தப்பட்டிருப்பதை வெளிப்படுத்துவதாக அமெரிக்க நிர்வாகத்திலுள்ள ஈராக்கின் பிரிட்டிஷ் பிரதிநிதி ஜெற்மி கிரிகன் ஸ்ரொக் தெரிவித்தார்.

ஈராக்கில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற நான்கு வெவ்வேறு தாக்குதல்களில் 30 பேர் கொல்லப்பட்டும் 200 இற்கு மேற்பட்டோர் காயமடைந்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## உலக நோக்கு

# கலிபோர்ணிய காட்டுத்தீயை அணைக்க தீயணைப்பு படையினர் கடும் பிரயத்தனம்



கலிபோர்ணியாவின் தென்பகுதியில் பரவிவரும் காட்டுத் தீயை அணைக்க தீயணைப்புப் படையினர் கடுமையாகப் போராடி வருகின்றனர். மழை பெய்வதற்கான சாத்தியங்களும் வெப்ப நிலை வீழ்ச்சியும் விரைவில் எதிர்பார்க்கப்படுவதால் தீ விரைவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மெக்சிக்கோவில் இருந்து லொஸ்ஏஞ்சல் வரை பத்திற்கு மேற்பட்ட இடங்களில் தீ பரவிவருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காட்டுத் தீயினால், இதுவரை 18 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனா. 2000 வரையிலான வீடுகள் அழிந்துள்ளன.

# ரஷ்ய சுரங்கத்தில் சிக்கிய 36 தொழிலாளர்கள் மீட்பு!



கடந்த வியாழக்கிழமை ரஷ்யாவின் தென் பகுதியில், நிலக்கரிச்சுரங்கம் ஒன்றில் 2600 அடி ஆழத்தில் வெளித் தொடர்புகள் துண்டிக்கப்பட்ட நிலையில் சிக்கிக்கொண்ட 46 சுரங்கத் தொழிலாளிகளில் 11 பேர் சுரங்கத்தின் மேற்பரப்பிற்கு கொண்டுவரப்பட்டனர். மிகுதியாகவுள்ள இருவரில் ஒருவர் இறந்துவிட்டதாகவும், மற்றைய ஒருவர் காணாமற்போய் விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோசமான உடல் நிலை காரணமாக மீட்கப்பட்ட இருவர் "ஸ்ரெச்சரில்" வைத்து எடுத்துச் செல்லப்பட்டனர்.

இந்தச் சுரங்கத்துள் சிக்கியிருந்தவர்களை மீட்பதற்கு - அருகிலிருந்த சுரங்கத்தில் இருந்து பாதை ஒன்றை உருவாக்கி முன்னேறிச் சென்றுகொண்டிருந்த நேரத்தில் - சிக்கியிருந்தவர்கள் தமது இருப்பிடம் தொடர்பான தகவல் ஒன்றை தம்மைக் காப்பாற்ற வருபவர்களின் பார்வைக்கு அனுப்பியிருந்ததாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

ரஷ்யாவிலும் உக்ரேனிலும் நிலக்கரிச்சுரங்கங்களில் விபத்துக்கள் அடிக்கடி நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தான் எல்லைப் பிரதேசத்தில் அமெரிக்க புலனாய்வாளர்கள் கொலை



பாகிஸ்தான் எல்லைப்பகுதியில் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக அமெரிக்காவினால் நியமிக்கப்பட்டிருந்த வில்லயம் கால்ஷ்சன் கிறித்தோபர், கிளீன் ஆகிய இரு புலனாய்வுத்துறையினர் பக்திகா மாகாணத்தில் அமைந்த கிகின் என்ற பிரதேசத்தில் கொல்லப்பட்டுள்ளதாக அமெரிக்க புலனாய்வுத்துறையினர் அறிவித்துள்ளனர்.

இந்தப் பிரதேசம் அல்-கொய்டா அமைப்பின் மறைவிடம் என்று தெரிவிக்கப்படுகிறது.

செப்ரெம்பர் 11 தாக்குதலின் பின்னர் ஆப்கானில் புலனாய்வுத்துறையினர் கொல்லப்பட்ட நான்காவது சம்பவம் இது எனத் தெரிவிக்கப்படுகிறது.


ராஜா யாழ்ப்பாணம்.

பிதாமகன்

காட்சிநேரம் 10.30, 2.30, 6.30 (பு.நே)

ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.

(சி-1619)

நிறைஞ்சனாஸ் சங்கானை

எம்.ஜி.ஆர் (இருவேடம்), சறோஜாதேவி

எங்க வீட்டுப்பிள்ளை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

X X X

(சி-1618)


## வட மாகாண தெங்கு பனம்பொருள் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் (வ.து)

### பதவி வெற்றிடங்கள்

கீழ்க்குறிப்பிடப்படும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து (இருபாலாரும்) உள்வாரியாகவும், வெளிவாரியாகவும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை ரூபா 10/= செலுத்தி சமாசத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் தலைவர், வடமாகாண தெங்கு பனம்பொருள் கூட்டுறவு சங்கங்களின் சமாசம், 52, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என முகவரியிட்டு கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் பதவியின் பெயர் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலமாகவோ, நேரடியாகவோஅனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்ப முடிவுத்திகதி 12.11.2003 ஆகும். சமாசத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவத்திலேயே விண்ணப்பித்தல் வேண்டும்.

1. **பொதுமுகாமையாளர் பதவி 101/07 (நிரந்தரம்)**

   1. **சம்பள அளவுத்திட்டம் -**
      **கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றறிக்கை இல 31/99 க்கு அமைய**
      5500 - 8200
      130x10 - 140x10

   2. **தகைமைகள்**

   அ) கூட்டுறவுப்பணியாளர் 8 ஆவது சம்பளத்திட்டத்திலான பதவியில் முகாமைமட்ட / மேற்பார்வை மட்ட 3 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப்பணியாளர் 9 ஆவது சம்பளத்திட்ட பதவியில் 6 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

   அல்லது

   ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டத்துடன் அல்லது அதற்கு இணையான தகைமையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 6 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

   அல்லது

   இ) கூட்டுறவுப் பணியாளர் உயர்தரப்பத்திரம்/ க.பொ.த. உயர்தரம் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமைமட்டத்திலான பதவியில் 8 வருடத்திற்கு குறையாத அனுபவமும்.

2. **அங்கத்தவர் தொடர்பு பயிற்சி உத்தியோகத்தர் 201 / 10 (நிரந்தரம்)**

   1. **சம்பள அளவுத்திட்டம்**
      கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றறிக்கை இல 31/99 இற்கு அமைய
      4750 - 6850
      100 x 10 - 110 x 10

   2. **தகைமைகள்**

   அ) கூட்டுறவுப் பணியாளர் 11 ஆவது சம்பளத்திட்டத்தில் அங்கத்தவர் தொடர்பு பயிற்சி உத்தியோகத்தராக 2 வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 12 ஆவது சம்பளத்திட்டத்தில் 4 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

   அல்லது

   ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டத்துடன் கூடிய கூட்டுறவு சமூக அபிவிருத்தி தொடர்பான பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.

மேற்குறித்த இரு பதவிகளுக்குமான வயதெல்லை 18 தொடக்கம் 45 வரையாகும். தற்போது கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரிபவர்களுக்கு வயதெல்லை ஏற்புடையதாகாது என்பதுடன், கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களின் விண்ணப்பங்கள் யாவும் தாம் பணிபுரியும் சங்கங்கள் / கொத்தணிகள் ஊடாகவே அனுப்பிவைத்தல்வேண்டும்.

கல்வித்தகைமை, சேவைத்தகைமைகளுக்குரிய சான்றிதழ்களின் நிழற்பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

தகைமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**கி.தவராசா,**
**தலைவர்**
**வ.தெ.ப.பொ.கூ.ச.சமாசம்.**

(சி-1744)

## மூன்றாவது பிறந்தநாள் வாழ்த்து



அல்வாய் வடக்கு மகாத்மா வீதியைச் சேர்ந்தவரும், நோர்வேயில் வசிப்பவருமாகிய பாஸ்கரன் கிருஷ்ணவேணி தம்பதிகளின் செல்வப் புதல்வன் கிருஷாந் தனது மூன்றாவது பிறந்த தினத்தை இன்று வியாழக்கிழமை நோர்வேயில் வெகு விமர்சையாகக் கொண்டாடுகின்றார்.

இவர் அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் அருளால் நீடூழிவாழ அம்மம்மா, அம்மப்பா, அப்பம்மா, நோர்வேயில் வசிக்கும் விஜிமாமா, சசிமாமா மற்றும் மாமா, மாமிமார், சுவிஸில் வசிக்கும் பெரியப்பா குடும்பம், சுவிஸில் வசிக்கும் பெரியப்பாமார்களான சிவனொளி, தங்கவடிவேல் குடும்பம், அல்வாயில் வசிக்கும் சிவஞானசுந்தரம், வெற்றிவேல் குடும்பம், கனடாவிலுள்ள மச்சான் குடும்பம், பிரான்ஸிலுள்ள அத்தான்மார் ஆகியோர் வாழ்த்துகின்றனர்.

தகவல்
நாகமுத்து சின்னத்தம்பி

(சி-1746)


☞ அழகுசாதனப் பொருட்கள்
☞ அன்பளிப்புப் பொருட்கள்
☞ பாடசாலை உபகரணங்கள்
☞ பிளாஸ்டிக் பொருட்கள்
☞ எவர்சில்வர் பொருட்கள்

இவை அனைத்தையும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

சந்தியா மல்ரி கோட்பாட

531, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

பிரதான வீதி, பண்டத்திரிப்பு.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## நாற்சந்தி

'படைத்தரப்பால் கைதாகி காணாமல் போன 245 தமிழர்களுக்கு இராணுவமே பொறுப்புக்கூற வேண்டும்' - இது மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை அறிக்கை வெளியிட்டுள்ள செய்தி.

இத்தனைநாள் விசாரணையின் பின்னர், இப்படித்தான் உப்புச்சப்பற்ற ஒரு அறிக்கை வெளிவரும் என்பது தெரிந்தவிடயம்தான்.

இது விசாரணை செய்து இவ்வளவு காலம் சென்றபின் அறிக்கையாகத் தெரிவிக்கவேண்டிய உண்மையாக இருப்பதுதான் ஆச்சரியம்.

இந்த அறிக்கை ஒரு ஆவணமாக கிடப்பில் போடப்படும் அவ்வளவுதான்.

இப்படிப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பான எத்தனையோ விசாரணைக்குழு அறிக்கைகளுக்கு நேர்ந்த கதிதான் இதற்கும் ஏற்படும்.

ஏனெனில் இதில் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்படுபவர்கள் தமிழர்கள் என்பதேயாகும்.

ஆணைக்குழுவின் சிபாரிசுகளைப் படித்து திருப்திப்படுவதில் என்ன இருக்கிறது? அவை அமுல் செய்யப்படுமா என்பதே கேள்வி.

இது அமுல் செய்யப்படுமுன்னர் அடுத்த மனித உரிமை மீறல் செயற்பாடுகள் நடந்துவிடவும்கூடும். அதற்கும் ஒரு விசாரணைக்குழு அமைக்கப்படவும்கூடும்...

'பிறகு அந்த குழுவின் அறிக்கை வெளியாகும்போது இந்த அறிக்கை மறக்கப்பட்டதாகிவிடும்!'

'அறிக்கைகள்விட்டும், அறிக்கைகளை நம்பியும் கெட்டவன் தமிழன். அந்தக்காலம் இப்போது மலையேறிவிட்டது' என்கிறார் ஒரு தமிழ் உணர்வாளர்.

## தேர்தல் ஆணைக்குழு அமைப்பதில்

# ஜனாதிபதியை நீதிமன்றத்துக்கு அழைப்பதா?

# மேல் நீதிமன்றம் பரிசீலனை செய்யவுள்ளது!

தேர்தல் ஆணைக்குழு அமைக்கப்படுவதை எதிர்த்து, தாக்கல் செய்யப்பட்ட மனுவில் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டிருக்கும் ஜனாதிபதியை, நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுப்பதா, என்பது குறித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் பரிசீலனை செய்யத் தீர்மானித்திருக்கிறது.

பொதுசட்ட உதவி நிலையம் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளது.

ஜனாதிபதியும் மற்றும் 18 பேரும் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அரசியல் யாப்பு மன்றம் சிபாரிசு செய்துள்ள, தேர்தல் ஆணைக்குழு அங்கத்தவர்களை நியமிப்பதற்கு ஜனாதிபதிக்கு கடப்பாடு உள்ளது. ஜனாதிபதி இதற்கு இணங்காத பட்சத்தில், அவர் தகுதியை இழப்பார். அதை செய்யாத பட்சத்தில் நீதிமன்றம் அதிகாரத்தை பிரயோகிக்க முடியும் என்றும் தெரிவித்தார்.

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில், முறைசாரா தொழிலில் வேலைசெய்யும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கருத்தரங்கொன்று நடைபெறவுள்ளது.

சாவற்காட்டு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் - மகளிர் அபிவிருத்தி நிலையத்தைச் சேர்ந்த சரோஜா சிவச்சந்திரன் தலைமையில், இன்றும் நாளையும் இந்தக் கருத்தரங்கு நடைபெறும்.

## கைடயக்கத் தொலைபேசிகளில் உள்வரும் அழைப்புக்கு இலவசம்

கையடக்கத் தொலைபேசிகளுக்கான உள்வரும் அழைப்புக்களுக்கு, அடுத்த ஆண்டு தொடக்கம் கட்ட ணம் அறவிடப்படமாட்டாது. தொலைத்தொடர்பு உள்வாங்கும் ஆணைக்குழு இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. இந்தத் தீர்மானம் அமுலாக்கப்பட்ட பின்னர்- 10 லட்சத்துக்கு மேற்பட்ட கையடக்கத் தொலைபேசி பாவனையாளர்கள் பயனடைவார்கள்.

## கடற்புலி...

அடுத்து இவரை கைதுசெய்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், வழக்கு விசாரணைகளுக்காக யாழ். சிறைச்சாலையில் இருந்து நீதிமன்றில் நடைபெற்ற அடையாள அணிவகுப்பில் உழவு இயந்திரங்களின் உரிமையாளரின் மனைவி சந்தேக நபரினை அடையாளம் காட்டவில்லை.

இதனை அடுத்து, 25 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு ஆட்பிணையில் போராளியை பிணையில் செல்ல பருத்தித்துறை நீதவான் த.அரியநாயகம் அனுமதித்தார். (202)

## நியூசிலாந்து, அவுஸ்...

மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் இராணுவத்தினரின் நடவடிக்கைகள் பற்றியும் புலிகளின் பிரதிநிதிகள் விளக்கினர்.

இந்தச் சந்திப்பின்போது, அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுலிலுள்ளபோதும், தமிழ்மக்கள் இதனால் உரிய பலனை அடையவில்லையென இளம்பரிதி, அவர்களிடம் தெரிவித்தார்.

உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில், படையினர் மக்களை சொந்த இடங்களுக்கு செல்ல அனுமதிக்கவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

அத்துடன், கடற்தொழிலாளர்கள் கடற்தொழிலில் ஈடுபடும்போது, படையினரால் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் விரிவாக எடுத்துக் கூறப்பட்டது.

அண்மைக்காலமாக - பொதுமக்களுக்கும், படையினருக்கும் இடையில் நடைபெற்ற மோதல் சம்பவங்கள் தொடர்பாகவும், இதன்போது- பொதுமக்களும், பத்திரிகையாளர்களும் தாக்கப்பட்டமை பற்றியும் விளக்கிக் கூறப்பட்டது. (202)

# ரெலவ்சனை பதவி விலக்க ஜே.வி.பி பூரண ஆதரவாம்!

## ஜே.வி.பியின் விமல் வீரவன்ச கூறுகிறார்

அண்மையில் விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல் தப்பிச் செல்வதற்கு, கண்காணிப்புக் குழுவின் தலைவர் காரணமாக அமைந்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டு, அவரை உடனடியாக பதவி விலக்குமாறு ஜனாதிபதி செயலகம் தெரிவித்த கருத்திற்கு தமது முழு ஆதரவை தெரிவிப்பதாக ஜே.வி.பியின் பிரசார செயலர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இவர் இது பற்றி மேலும் தெரிவிக்கையில், கண்காணிப்புக் குழுவினர் அனைவரையும் நாட்டைவிட்டு வெளியேற்ற ஜனாதிபதி தனது முழு அதிகாரத்தினையும் பயன்படுத்த வேண்டும். அவர்கள் புலிகளின் முகவர்களாக தொழிற்படுவது, அவர்களது ஒவ்வொரு நடவடிக்கையும் அதனை நிரூபணமாக்கியுள்ளது என அவர் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை ஜனாதிபதியுடன் நடாத்திய பேச்சுவார்த்தை முழுத்திருப்தி அளிப்பதாகவும், எனினும்- ஜே.வி.பி, ஸ்ரீல.சு.க கூட்டணி பற்றி எவ்வித பேச்சுக்களும் இடம் பெறவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (01)

## திருமலை-முள்ளிப்பொத்தானையில்...

சேர்ந்த ஐவர் காயமடைந்தனர்.

இதில் வெள்ளைத்தம்பி முகமது சரீவ், அவரது மனைவியான முகமது சரீவ் பாத்திமா ஆகிய இருவரும் சிறு காயமடைந்ததுடன், அவர்களது பிள்ளைகளான முகமது சரீவ் - மர்ஆக் (வயது 25), முகமது சரீவ் இம்லான் (வயது 20), முகமது சரீவ் ரஸாக் (வயது 14) ஆகியோர் படுகாயமடைந்து கந்தளாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவங்களை அடுத்தே "முஸ்லிம் இளைஞர் முன்னணி" என்ற அமைப்பினால் நேற்றைய தினம் மறியல்போராடடம் நடத்தப்படடது. 96 ஆம் மைல்கல் என்னும் பகுதியில், திருமலை கண்டி வீதியை வழிமறித்தே இந்தப் போராட்டம் நடந்தது.

இந்த மறியற் போராட்டத்தை கைவிடுமாறு கோரி கந்தளாய் பொலிஸார் காலையில் சென்று கூறியபோது, மறியலில் ஈடுபட்டோர் அதனைக் கைவிடவில்லை. மாறாக பாரிய மரங்களினை வெட்டி, வீதிக்கு குறுக்கே போட்டு மேலும் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தச் சம்பவத்தினை பார்வையிடச் சென்ற திருமலை மாவட்ட கண்காணிப்புக் குழுவின் தலைவரான அப்துல் குருகா சென்ற வாகனமும் மறியலில் ஈடுபட்டவர்களால் அடித்து நொருக்கப்பட்டது.

அத்துடன், அவ் வீதியால் சென்ற பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களது ஓட்டோ ஒன்றும், மரக்கறி லொறி ஒன்றும் நொருக்கப்பட்டன.

இந்தச் சம்பவங்களினால் நேற்றைய தினம் திருமலை- கொழும்பு இடையிலான போக்குவரத்து தடைப்பட்டது. திருமலையிலிருந்து வந்த வாகனங்கள் அனைத்தையும், பொலிஸார் கநதளாயில் தடுத்து நிறுத்தினர். அது போலவே மறுபக்கத்தால் வந்த வாகனங்களும், 98 ஆம் மைல்கல்லில் நிறுத்தப்பட்டது. இதனால், இந்த இரண்டு இடங்களிலும் வாகனத் தொடரணி காணப்பட்டது.

இதன் பின்னர் திருமலை "பிளான்டன் பொயின்ற்" படைமுகாமின் தலைமை அதிகாரியான பிரிகேடியர் ஏ.எஸ்.சகீர் தலைமையிலான இராணுவக் குழுவினர் சென்று, மறியல் போராட்டத்தில் ஈடுபட்டோரை விலகிச் செல்லுமாறு நடத்திய பேச்சுக்களும் வெற்றியளிக்கவில்லை.

இதன் பின்னர், தமிழ் தேசியக் கூட்டமைப்பு திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன - பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க ஆகியோரைத் தொடர்பு கொண்டு நிலைமையை சீர்படுத்துமாறு கேட்டார்.

இதனைத் தொடர்ந்து கிழக்கு மாகாண பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர் ரெவில் விஜயரட்ண, திருமலை நகரப் பகுதிகளில் இருந்து 200 கலகம் அடக்கும் பொலிஸாரை சம்பவ இடத்திற்கு அனுப்பி வைத்தபோது, மறியற் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் போராட்டத்தைக் கைவிட்டு மாலை 2 மணிக்கு அகன்று சென்றனர்.

இந்தச் சம்பவங்களை அடுத்து மூதூர், கிண்ணியா போன்ற பிரதேசங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. தற்போது திருமலை நகரங்களில் உள்ள பள்ளிவாசல்களுக்கும் இராணுவ பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (04,10)

## கொழும்பு சிங்கள - தமிழ்...

டிருந்தபோது, மண்டபத்தில் அமர்ந்திருந்த சிலர், கூச்சல் போட்டு நிகழ்வைக் குழப்ப எத்தனித்தனர்.

இதேவேளை, மண்டபத்தின் வெளிவாசலுக்கு முன்பாக பெருந்திரளாகத் திரண்ட சிஹல உறுமயவைச் சேர்ந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் - பொல்லுகள், கற்களைக் கொண்டு தாக்குதல் நடத்தியவாறு மண்டபத்துக்குள் நுழைய எத்தனித்தனர்.

மண்டபத்துக்கு உள்ளேயிருந்த சில ஆர்ப்பாட்டக்காரர்கள் - நிகழ்வைக் குழப்ப முயன்றபோது, அவர்களை நிகழ்ச்சி ஒழுங்கமைப்பாளர்களான 'ஹிரு' பத்திரிகையாளர் குழுவினர் அவர்களை வெளியேற்றி, முன்கதவைத் தாளிட்டனர்.

மண்டபத்துக்குள் நிகழ்வு தொடர்ந்து இடம்பெற்றுக்கொண்டிருந்தபோது - வெளியே எதிர்ப்புக் கோஷமிட்டுக்கொண்டு, அதைக் குழப்ப எத்தனித்த சிஹல உறுமயவினர், நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அவர்களைச் சமாதானப்படுத்தி தடுத்துநிறுத்த முற்பட்டனர்.

ஆனால், ஆர்ப்பாட்டக்காரர்கள் அவர்களையும் பொல்லுகள் மற்றும் கற்களைக் கொண்டு தாக்கினர். இரு தரப்பினருக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டபோது, அவ்விடத்திற்கு வந்த பொலிஸார் அதைத் தடுக்க முற்பட்டனர்.

பொலிஸாரின் தடுப்பையும் மீறி, மண்டபத்தின் மீது ஆவேசமாகத் தாக்குதல் நடத்த, சிஹல உறுமய ஆர்ப்பாட்டக்காரர்கள் முற்பட்டனர். அத்துடன், அப்பகுதியில் காணப்பட்ட சிங்கள - தமிழ் கலைக்கூடல் தொடர்பான பதாதைகள் - கொடிகளையும், அறுத்தெறிந்து அவற்றுக்கு தீயிட்டு எரித்த்னர்.

இந்தக் கலைக்கூடலில் கலந்து கொண்ட சிங்களக் கலைஞர்கள், பிரமுகர்கள் அனைவரும் தேசத் துரோகிகள் என்றும், அவர்கள் அனைவரையும் கொல்லவேண்டும் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் தொடர்ச்சியாக கோஷமெழுப்பிக்கொண்டிருந்தனர். இந்தச் சம்பவத்தில் இரண்டு பத்திரிகையாளர்கள் உட்பட ஏழுபேர் காயமடைந்தனர்.

சிஹல உறுமயிவின் தாக்குதலுக்கு இல்லாகி காயமடைந்தோரில் ஹிரு எப்.எம்.வானொலி நிருபர், அத்துடன் லங்கா வார இதழின் பெண் நிருபர் யமுனி ரஸ்மிகா ஆகியோரும் அடங்குகின்றனர் மேலும் 5 பேர் இந்தச் சம்பவத்தில் காயமடைந்துள்ளனர்.

தாக்குதலில் காயமுற்றவர்களை வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்ல முற்பட்டபோது, அம்புலன்ஸ் வண்டியை சிஹல உறுமய குண்டர்கள் தடுத்ததாகவும் தெரியவருகிறது.

இந்தச் சம்பவம் குறித்து ஏற்பாட்டாளர்களால் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து, அப்பகுதிக்கு மேலதிக பொலிஸார் - கலகத் தடுப்பு ஆயுதங்களுடன் வந்து, நிலைமையைக் கட்டுப்படுத்தினர்.

பொலிஸாரின் தடுப்புக்களையும் உடைத்துக்கொண்டு சிஹல உறுமய, எதிர்த்தாக்குதல் நடத்த முற்பட்டனராயினும், பின்னர் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இவ்விழாவை ஒழுங்கு செய்தவர்களில் ஒருவரான றோஹித பாஷண கருத்துக் கூறுகையில் -

தமிழ் சிங்கள இனங்களுக்கிடையில் நீண்ட காலமாக இருந்து வரும் இனத்துவேசத்தைப் போக்கி, நல்லுறவை வளர்க்கும் ஒரு நடவடிக்கையாகவே, இந்தக் கலை விழாவை ஒழுங்கு செய்தோம். இதிலே ஏராளமான சிங்களக் கலைஞர்கள் கலந்து கொண்டிருந்தும், அதே இனத்தைச் சேர்ந்தவர்களால் அதை ஏற்க முடியாதுள்ளமை கவலைக்குரியது என்று தெரிவித்துள்ளார்.

நேற்றைய தாக்குதலின்போது, சிஹல உறுமயவுடன், ஜே.வி.பி.யின் மாணவர் ஒன்றியம் மற்றும் சிங்க தேசிய இயக்கங்கள் சிலவும் இணைந்திருந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விழாவிற்கு சிஹல உறுமய, ஜே.வி.பி., சிங்கள தேசிய முன்னணி, போன்ற கட்சிகள் உட்பட, தனிப்பட்ட இனவாதக் குழுக்களும் எதிர்ப்புத் தெரிவித்து வந்ததுடன், இந்நிகழ்ச்சியைத் தடை செய்யும்படி அரசுக்கு அழுத்தம் கொடுத்து வந்தமையும் இங்கே குறிப்பிடத்தக்கது. (01,03)

இரகுநாதையர்
வாக்கிய பஞ்சாங்கக் கலண்டர்
விற்பனையாகிறது
விலை ரூபா 70 மட்டுமே
கிடைக்குமிடம்
சோதிட விலாச புத்தகசாலை
46, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

நமது ஈழநாடு நடாத்தும்
5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில்
2003 பரீட்சைக்குத் தோற்றும்
மாணவர்களுக்கான
இலவச முன்னோடிக்
கருத்தரங்கு
இடம்: யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மண்டபம்
காலம்: 2003.11.02 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம்
மேற்படி பரீட்சைக்குத் தோற்றும் மாணவ, மாணவிகளை அன்புடன் அழைக்கின்றோம்.
அனுசரணை வழங்குவோர்
ஹரிஹரணன் பிறிண்டேர்ஸ்
ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
SEYLAN BANK LIMITED செலான் வங்கி
டிக்கிரி கணக்கு
புதிதாக டிக்கிரிக் கணக்கு ஆரம்பிக்க விரும்புபவர்கள் கருத்தரங்கு மண்டத்தில் ஆகக்குறைந்தது 100 ரூபா செலுத்தி ஆரம்பிக்க வசதி செய்யப்பட்டுள்ளது.
BANK OF CEYLON
இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 30.10.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.